# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 158 — 1975 අප්‍රේල් 04 වැනි සිකුරාදා — 1975.04.04

158 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. | 329 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 343 |


## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

**1 : 1** விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரு பித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**1 : 2** ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தாரதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்கு மிடத்து, சிங்கள மொழிமூலம் கல்வி பயின்ற சிங்கள வராக இருப்பின் அவர் சிரேட்ட தாரதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

**1 : 3** விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/ சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட " புதி தாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமை வாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

**2 : 1** அரச சேவையில் உள்ள திருமணமான உத்தி யோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

**2 : 2** மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத் தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரை யில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராயின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவை யானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1973 ம் ஆண் திசெம்பர் மீ 15 ந் உ.*

---

3. சேவை நிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைத் தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்.

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குக் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் ஏதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரச்கரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும்வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏடுபுடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நீலக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கெனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கெனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கெனவே வைத்திய பரிசைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்தவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சதவீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையை செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

5 : 3 அரச சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய நியமனங்களை 1971.12.31 ஆந் திகதியன்று வகித்தவர்களும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01 ஆந் தேதியின் பின் விடுக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்கும் 1971.12.31 ஆந் தேதியன்று ஓய்வூதியத்துக்குரிய நியமனங்களை உள்ளூராட்சிச் சேவையில் வகித்தவர்களும் அரச சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01. ஆந் தேதியின் பின் விடுவிக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்கும் முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களின் பதவிகளில் அவர்களுக்குமட்டுமுரியதாக ஓய்வூதியத் தகைமை அனுமதிக்கப்படும்.

*5 : 4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்துக்குரியவையான அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01 ஆந் தேதியின் பின் விடுவிக்கப்பட்டவர்களும், 1971.12.31 ஆந் தேதியன்று ஓய்வூதியத்துக்குரித்துடையவர்களாக இருந்தவர்களுமான தரைப்படை, கடற்படை, வான்படை என்பனவற்றின் நிலைப்படை ஆளணியினர்க்கு, அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத் தகைமை அனுமதிக்கப்படும். ஆயினும், அவர்களது தரைப்படை, கடற்படை, வான்படைச் சேவை, ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புக்களின் கீழுள்ள அவர்களது ஓய்வூதியத்துக்குரித்துடைய சேவையுடன் ஓய்வூதியத்துக்காகக் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.*

*6. யுத்த சேவைச் சலுகை*

*6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காதுவிடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.*

*7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்*

*7 : 1 எல்லாத் தன்கமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாக பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.*

*7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை*

*8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.*

---

*திருக்கோணமலை மாவட்டத்தின் உப்புவெளி பகுதி பிறப்பு இறப்புப் பதிவாளருக்கும் திருக்கோணமலைப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி*

*மேற் கூறப்பட்ட பதவிக்கு உப்புவெளி பிறப்பு இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண் பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பகாரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறாது.*

*2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள் அலுவலகங்கள் அதாவது பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக் கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து 1975 ம் ஆண்டு ஏப்பிரல் (சித்திரை) மாதம் 21 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.*

*திஸ்ஸ தேவேந்திரா,*
*மாவட்டப் பதிவாளர்.*

*மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,*
*திருக்கோணமலை,*
*1975 ம் ஆண்டு மார்ச் (பங்குனி) 10 ந் வ.*

4–24—01.04.75 ந் திகதிபவர்த்தமானி இல. 158

---

*கமத்தொழில் திணைக்களம்*

*கமத்தொழில் போதனாசிரியர் பதவிகள்.*

*கமத்தொழில் திணைக்களத்திலுள்ள கமத்தொழில் போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன் கீழ் வழங்கியுள்ள மாதிரிப்படிவத்திலுள்ள பிரகாரம் கமத்தொழில் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) கமத்தொழில் திணைக்களம், பேராதனை என முகவரியிட்டு 1975 ஏப்ரில் 30 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வண்ணம் அனுப்பப்படல் வேண்டும்.*

*குறிப்பு.—(1) இதன்கீழ் வழங்கியுள்ள மாதிரிப்படிவம் போன்றமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் தேதி வரையும் தாமதிப்பவர் அதனாலாகும் இடருக்கு தாமே பொறுப்பாவார்.*

*2. ஒப்பந்த நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—*

*(1) (அ) பதவிகள் நிரந்தரமானவை ஆகும். அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை செய்யப்படல் வேண்டும். நியமனம் முதலில் மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகாண் நிலையில் அமைந்திருக்கும்.*

*(ஆ) தற்காலிகமான பதவிகள் தற்காலிக அடிப்படையில் மட்டுமே அமைவதுடன் அரசாங்கத்தின் கீழ் நிரந்தர தொழில் எதையும் கோருவதற்கு உரித்தற்றவையாகும். இந் நியமனங்கள் அரசாங்கத்தின் விருப்பிற்கிணங்க இடைநிறுத்தப்படக்கூடியவையாகும். எவ்வாறாயினும், இவ்வாறு தற்காலிக அடிப்படையில் ஆள் சேர்க்கப்பட்ட கமத்தொழில் போதனாசிரியர்கள், தற்காலிக சேவை முடிவடைவதற்கு முன் ஏற்படுகின்ற ஏதாவது கனிசமான வெற்றிடங்களுக்குரிய நியமனங்களுக்கு கருத்திற் கொள்ளப்படுவார்கள்.*

(2) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் நியமனத்தின் மூன்று வருடங்களுக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். அத்துடன் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளிலும் சித்தியடைதல் வேண்டும். அவர்கள் முதல் வருடத்திற்குள் தமிழிலும் கடமையாற்றும் தகவினைப் பெறுதல் வேண்டும்.

3. வேதனமும் படியும்.—இப் பதவிக்கான திரட்டிய வருடாந்த வேதன அளவுத் திட்டம்—ஆண்டொன்றுக்கு ரூபா 3,864 இலிருந்து ரூபா 144 கொண்ட 19 வருடாந்த வேதன ஏற்றங்களாலும், ரூபா 180 கொண்ட 4 வருடாந்த வேதன ஏற்றங்களாலும் ஆண்டொன்றுக்கு ரூபா 7,320 ஐ அடையும். (ரூபா 4,584 க்கும் ரூபா 6,024 க்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடைகள்).

வகுப்பு 1.—ஆண்டொன்றுக்கு ரூபா 7,500 இலிருந்து ரூபா 180 கொண்ட 3 வருடாந்த வேதன ஏற்றங்களாலும், ரூபா 240 கொண்ட 2 வருடாந்த வேதன ஏற்றங்களாலும் ஆண்டொன்றுக்கு ரூபா 8,520 ஐ அடையும்.

விஷேச வகுப்பு.—ஆண்டொன்றுக்கு ரூபா 8,760 இலிருந்து ரூபா 240 கொண்ட 3 வருடாந்த வேதன ஏற்றங்களால் ரூபா 9,480 ஐ அடையும்.

குறிப்பு.—(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கமத்தொழில் பட்டதாரிகளும், பேராதனை அல்லது குண்டசாலை கமத்தொழில் பாடசாலையின் 1 ம் அல்லது 2 ஆம் வகுப்பு சிரேஸ்ட தராதரப் பத்திரத்தையுடையவர்களும் தெரிவு செய்யப்பட்டாலே ஆரம்ப வேதனமாகிய ஆண்டொன்றுக்கு ரூபா 3,864 க்கு தகுதியுடையவராவர். தமது நியமனத்தின் ஒரு வருடத்திற்குள், திணைக்களத்தினல் நடாத்தப்படும் தேசிய மொழிகள் பரீட்சையில் சித்தியடையுமாறும் வேண்டப்படுவார்கள். குறிக்கப்பட்ட காலத்துள் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறுதல் அவர்களது அடுத்த வேதன ஏற்றத்தை பின்போடுவதற்கு வழிவகுக்கும்.

(2) பேராதனை அல்லது குண்டசாலை கமத்தொழில் பாடசாலையின் "சித்தி" பிரிவை மட்டுமுடைய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படின், தகுதிகாண் நிலையிலுள்ளோர்க்காய தகைமை பெறும் திணைக்களப் பரீட்சையின் பகுதி I ஐச் சித்திபெய்தும் வரை ஆண்டொன்றுக்கு ரூபா 3,180 ஐ மட்டுமே பெறத் தகுதியுடையவராவர். அதன்பின்பே ஆண்டொன்றுக்கான ஆரம்ப வேதனமாகிய ரூபா 3,864 ஐப் பெறத்தகுதியுடையோராவர். அத்துடன் தமது நியமனத்தின் ஒரு வருடத்திற்குள் திணைக்களத்தினல் நடாத்தப்படும் தேசிய மொழிப் பரீட்சையிலும் சித்தியெய்துமாறும் வேண்டப்படுவர். இப் பரீட்சையை குறிக்கப்பட்ட காலத்துள் சித்தியெய்தத் தவறுதல் அவர்களது அடுத்த வேதன ஏற்றத்தை பின்போடுவதற்கு வழிவகுக்கும்.

தகுதிகாண் நிலையிலுள்ளோர்க்காய திணைக்களப் பரீட்சையின் பகுதி I ஐ ஒரு வருடத்திற்குள் சித்தியெய்தத் தவறியோர், தேசிய மொழிகள் பரீட்சையிலும் சித்தியடைந்தாலேயே ஆண்டொன்றுக்கு ரூபா 3,864 ஐப் பெறத் தகுதியுடையோராவர்.

4. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கீழ்க்காணப்படும் தகைமையுடையவராவர் என்பதற்கு திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராயிருப்பதுடன் உடல்நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1975 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ந் தேதியன்று 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தருக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(இ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கமத்தொழில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) (1) சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) ப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் ஆகியவற்றுடன் வேறு ஏதாவது நான்கு பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் இவற்றுள் ஐந்தை (5) ஒரே தடவையிலும் அதே பரீட்சையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது இவற்றிற்கு சமமான அல்லது உயர்தராதரமுடைய பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(2) பேராதனை அல்லது குண்டசாலை கமத்தொழிற் பாடசாலையின் சிரேஷ்ட சான்றிதழ்.

அல்லது

(உ) திணைக்களத்தின் புலமைப் பரிசில் பெற்றுள்ளவராயும், பேராதனை அல்லது குண்டசாலை கமத்தொழில் பாடசாலையின் டிப்புளோமா பட்டம் பெற்றுள்ளவராயுமிருத்தல்.

மு. கு.—குண்டசாலையிலுள்ள இலங்கை கமத்தொழில் பாடசாலையின் 1974 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி, பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போரினது விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். எனினும், உண்மையில் அவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தார்களென, முடிவுகள் வெளியானவுடனேயே கமத்தொழில் பாடசாலையால் எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அல்லாவிடின் அவர்களது விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அல்ல) யும் இணைத்திருத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—சமய திட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும்/உயர்தொழில் தகைமைப் பத்திரமும் அல்லது இவற்றில் எதுவேனும்,

(இ) சிங்கள மொழியில் சித்தியெய்திய உயர்பரீட்சைச் சான்றிதழ்,

(ஈ) அண்மையில் பெற்ற குணச்சான்றிதழ் இரண்டு ; (ஏற்கனவே அரச சேவையிலுள்ள அபேட்சகர்கள் குணச் சான்றிதழ்களை அளிக்கும்படி வேண்டப்படவில்லை)

குறிப்பு.—சான்றிதழ்களினதோ அன்றேல் நற்சாட்சிப் பத்திரங்களினதோ பிரதிகள் மீள அனுப்பப்படமாட்டா.

6. அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். அவ்வித விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட தேதி கடந்து இக்காரியாலயத்தில் கிடைக்கப்பெறுமாயின் அவ்விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட தேதியன்றோ அதற்கு முன்னரோ உரிய திணைக்களத் தலைவரைச் சேர்ந்திருக்காவிடினும் சம்பந்தப்படும் திணைக்களத் தலைவர் தாமதத்துக்குரிய தகுந்த காரணங்களைக் கூறி ஏற்றுக்கொள்ளுகையை விதந்துரைக்காவிடினும் கருத்துக் கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் கமத்தொழில் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்), கமத்தொழில் திணைக்களம், பேராதனை, என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தருக்காயினும் தனிப்பட்டமுறையில் அனுப்பப்படலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இச்செய்திமடலின் I ம் பாகம் II(அ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமைபற்றி அறிவிக்கப்படும்.

ஈ. எப். எல். அபேரத்ன,
கமத்தொழில் பணிப்பாளர்.

கமத்தொழில் திணைக்களம்,
பேராதனை,
1975.03.18.

மாதிரி விண்ணப்பப் படிவம்

கமத்தொழில் போதனாசிரியர் பதவிகள்—கமத்தொழில் திணைக்களம்

1. முழுப்பெயர் :—

(அ) முதற்பெயர் :————.

(ஆ) இதர பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. பிறந்த தேதியும் 1975.04.30 ஆந் தேதியன்று வயதும் : ————.

(பிறப்புப் பதிவுச் சான்றிதழ் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)

4. நாட்டினமும் அது பெறப்பட்டது எவ்வாறு என்பதும் :————.

5. பின்வருவோர் பிறந்த இடங்களைத் தருக :—

(அ) விண்ணப்பதாரி :————.

(ஆ) விண்ணப்பதாரியின் தந்தை :————.

(இ) விண்ணப்பதாரியின் தந்தைவழிப் பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பதாரியின் தந்தைவழிப் பூட்டன் :————.

6. விண்ணப்பதாரி விவாகமானவரா? தனியானவரா? :————.

7. கல்வி, தொழிற்றகைமைகள் :————.
(சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

8. சிங்களத்தில் சித்தியெய்திய பரீட்சை :————.
(சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

9. அரசாங்கத்தின் கீழ் முன்னர் ஏதாவது தொழில் புரிந்தவரா? அப்படியாயின் தொழிலின் தன்மையையும் விலகியதற்கான காரணங்களையும் தருக :————.

10. விசேட உரிமைகள், தகைமைகள் அல்லது அனுபம் பற்றிய விபரங்கள் :————.

11. இதற்குமுன் இப்பதவிகளுக்காக விண்ணப்பித்தீரா? அப்படியாயின் விபரங்கள் தருக :————.

12. சட்ட நீதிமன்றமெதிலும், குற்றத் தவறொன்றுக்காக எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால் தவறு, தண்டனை தொடர்பான முழு விபரங்களைத் தருக :————.

13. குணச்சான்றிதழ்கள் வழங்கிய மூவரது பெயர்களும் பதவிகளும் :————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிசெய்கிறேன். இதன்கண் காணப்படும் விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தகைமை நீக்கஞ் செய்யப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இழப்பீடு எதுவுமின்றி சேவை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நானறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தேதி :————.

4-33—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

**திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பகுதி பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கும் கொட்டியார் பற்றுப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற் கூறப்பட்ட பதவிக்கு சேருவில பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலாரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பகாரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறாது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக்கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக் கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து 1975 ம் ஆண்டு ஏப்பிரல் (சித்திரை) மாதம் 21 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

திஸ்ஸ தேவேந்திரா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருக்கோணமலை,
1975 ம் ஆண்டு மார்ச் (பங்குனி) 10 ந் வ.

4-25—0404.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

**திறைசேரி**

உதவிப் பணிப்பாளர் பதவி (கூட்டுத்தாபனப் பகுதி)

பொதுத்திறைசேரியின் நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் எழுதப்பெற்று திறைசேரிப் பிரதிச் செயலாளர், (மத்திய வினை), அ. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியுடன் 1975 ஏப்பிரல் மாதம் 18 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அவர் பெறக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். உறையின் வலதுபக்க மேல் மூலையில் "நூலகப் பொறுப்பாளர் பதவி" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பப்படிவம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. சம்பளமும் படிகளும்.—நிரந்தர, உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற அடிப்படையில் ஆண்டுக்கு 6,600 ரூபா 8 × 180—8,048 ரூபாவும் மணமானவர் படியும்.

3. தகைமைகள்.—அபேட்சகர் ஒவ்வொருவரும்—

(அ) சிறந்த நல்லொழுக்கம் உடலுறுதியும் உடையவரென்பதற்கும்,

(ஆ) 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேலெல்லை வயது பொருந்தாது);

கல்வித் தகைமைகள் :

(1) இலங்கை நூலகச் சங்க இடைநிலைப் பரீட்சை அல்லது கனிட்ட பல்கலைக்கழகமொன்றில் நூலகவியல் டிப்புளோமா அல்லது

(2) இலங்கை நூலகச் சங்க முதல் பரீட்சையும் அத்துடன் நூலகப் பொறுப்பாளராக 10 ஆண்டு அனுபவமும் அல்லது அரச சேவை/கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற நிறுவனமொன்றில் உதவி நூலகப் பொறுப்பாளர்.

பின்வரும் துறைகள் எவற்றிலும் அரசாங்கத் திணைக்களம், பெரிய கைத்தொழில் அல்லது வர்த்தக முயற்சியொன்றில் நிருவாகக் கட்டத்தில் தகைமைக்குப் பின்னர் அனுபவம் பெற்றிருந்தால் நன்மை பயப்பதாகும்.

(1) நிதி நிருவாகம், பரிசிலனையும் முகாமையும்,

(2) கணக்கிடல், செலவுக் கணக்கு, முகாமை முறைகள், தயாரித்தல்,

(3) திட்டப் பரிசிலனையும் மதிப்பிடலும்.

4. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது);

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) உயர்தொழிற்றகைமையும் அத்துடன்/அல்லது தொழினுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களாயாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தலாகாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பப் படிவங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் திறைசேரிப் பிரதிச் செயலாளர், என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இவ்வலுவலகத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பலாகாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காக நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இச் செய்திமடலில் I ஆம் பாகம் (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

எல். பி. அபயரத்தின,
திறைசேரிப் பிரதிச் செயலாளர்.

பொதுத்திறைசேரி,
அ. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு-1,
1975, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி.

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :————.

2. முழுப்பெயர் (பெரிய எழுத்தில்) :————.

3. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றமெதுவும் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்).

4. பிறந்த தேதி :— ஆண்டு :———— மாதம் :———— நாள் :————.

5. விண்ணப்ப முடிவு தேதியில் திட்டமான வயது :—
ஆண்டுகள்————. மாதங்கள்————. நாட்கள் :————.

6. இலங்கை குடியா என்பது ; மரபுவழியாகவா பதிவு வழியாகவா என்பதைக் கூறுக. (1 ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்க)

7. பின்வருவோர் பிறந்த இடம் (2 ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்க :—

(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

8. (அ) பால் :————.
(ஆ) மணமானவரா, தனியானவரா, வாழ்விழந்தவரா :————.

9. (1) சிங்களம், (2) தமிழ், (3) ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி பெற்ற உயர்ந்த பரீட்சைகள் :—
1.
2.
3.

10. பல்கலைக்கழக, உயர்தொழில், தொழினுட்ப தகைமைகள் (பெற்றுள்ள பட்டங்கள், சிறப்புச் சித்தி, உயர்தொழில் அத்துடன்/அல்லது தொழினுட்ப தகைமைகள் யாவற்றையும் அவற்றைப் பெற்றதேதி, வகுப்பு (ஏதுவுமுண்டானல்) எடுத்த பாடங்கள், கழகத்தின் பெயர் ஆகியவற்றுடன் விரிவாகக் கூறுக) :————.

11. இப்பொழுது வகிக்கும் பதவியும் முந்திய நியமனங்கள் ஏதுவுமுண்டானல் அவையும் (வேலையிலமர்த்தப்பட்ட தேதி, விலகிய தேதி, கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளம் யாவும் குறிப்பிடப்படல் வேண்டும்) :—

| பதவி | முதல் | வரை | ஆண்டுச்சம்பளம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

12. விசேட தகைமைகள் (அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விசேட தகைமைகளை அத்துடன்/அல்லது அனுபவத்தை பெற்றிருக்கிறீரா ? அவ்வாறாயின் அவற்றின் முழு விவரங்களையும் தேதிகளுடன் கூறுக. செய்திமடல் அறிவித்தலில் விசேட தேவைகள் எவையும் குறிப்பிடப்பட்டிருந்தால் அவற்றைப் பார்க்க.) :————.

13. பிற விவரங்கள் எவையேனும் :————.

14. இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இதனகத்துள்ள விவரங்களுள் எவையேனும் உண்மையற்றவை அல்லது சரியற்றவையெனக் காணப்பட்டால், தேர்வுக்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கு ஆளாவேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்னர் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் இழப்பீடு எதுவுமின்றித் தள்ளப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

4-71—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

### இலங்கை வான்படை

### மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள்

இலங்கை வான்படையில் மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களுக்கு இலங்கை வான் படையில் பறத்தற் பொறுப்பு லெப்டினென் என்ற கிரம்மான ஆணைப்பதவி வழங்கப்படும்.

3. மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான சம்பள வீதங்கள் சுகாதார சேவைத் திணைக்கள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைய சம்பள வீதங்களாகவே இருக்கும். அத்துடன், பின்வரும் படிகளும் வழங்கப்படும்.

(அ) சேவைப்படி.—பறத்தற் பொறுப்பு லெப்டினெனுக்கும் சதுரவியூக முதல்வருக்கும் மாதமொன்றுக்கும் 150 ரூபா ; பக்க முனைனுக்கு மாதமொன்றுக்கு 225 ரூபா.

(ஆ) ஓய்வூதியமற்றபடி, ஒத்த தகைமைகளையுடைய அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுமாறு வழங்கப்படும்.

(இ) தகைமைச்சம்பளம், வான்படைச் சம்பளக் கோவையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு வழங்கப்படும்.

(ஈ) சீருடைப்படி பின்வருமாறு வழங்கப்படும் :—

வெப்பமண்டல உடைக்கெனத் தொடக்கத்தில் 1,000/- ரூபா வழங்கப்படும். அத்துடன், சீருடைகளைப் பேணுவதற்கு சீருடை பேணற்படியாக மாதாந்தம் 25/- ரூபா வழங்கப்படும்.

(உ) சொக்கன்படி.—விவாகமாகி வெளியில் வசிப்பவராகவிருந்தால் மாதமொன்றுக்கு 74/- ரூபா வீதம் வழங்கப்படும். உணவு அரங்கி வசிக்கும் உத்தியோகத்தர்களுக்கு சொக்களின் சேவை இலவசமாக வழங்கப்படும்.

4. (அ) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் ஆணை வழங்கப்படும் திகதிக்கு முன்பு அரசாங்கத்தில் ஓய்வூதியமுள்ள பதவியொன்றை வகித்தவராக இருந்தால் அவர், காலத்துக்குக்காலம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் விளக்கக் குறிப்புகளினல் திருத்

கப்பட்ட 1941 பெப்புருவரி 5 ஆந் தேதி கொண்ட ஓய்வூதிய விளக்கக் குறிப்புக்களில் விதிக்கப்பட்ட நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகத் தொடர்ந்து ஓய்வூதியம் பெறும் உரிமையுடையன வாக இருப்பார்.

(ஆ) அபேட்சகர் மேற்போந்த 4(அ) ஆம் பந்திக்கு உட்படாத வராக இருந்தால் அவர் ஓய்வூதியம் பெறத்தகுதி இல்லாதவரா வார். ஆனால், அவர் ஓய்வூதியத் திணைக்களத்தின் 1972 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆம் தேதி கொண்ட 3 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தில் விதிக்கப்பட்டவாறு அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவுதொகை அளித்தல் வேண்டும்.

5. பதவி உயர்வு வாய்ப்புக்கள், சம்பளம், சேவை நிபந்தனை கள் தொடர்பான மேலதிக தகவல்களை கொழும்பு 2, சேர் சிற்றம் பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை வான்படைத் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. விண்ணப்பகாரர் பின்வரும் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

(அ) தேசிய இனம்.—அபேட்சகர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.—அபேட்சகர் 1975 ஏப்ரில் 1 ஆம் தேதியில் 32 வயதுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்.

(இ) கல்வி, தொழிற்றுறைத் தகைமைகள்.—அபேட்சகர் மருத்துவத்திலும் அறுவைச் சிகிச்சையிலும் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது உயர் தகைமை பெற்றவராக இருக்க வேண்டியதுடன் பதிவுக் காலந்தொட்டு, ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களுக்குத் தொழில் புரியவேண்டி இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவு பெற்று இருத்தலும் வேண்டும்.

(ஈ) மருத்துவ தரம்.—அபேட்சகர் வான்படை மருத்துவ தரத்துக்கு இசைவான தரமுடையவராய் இருத்தல் வேண்டும் (ஆகக் குறைந்த உயரம் 5 அடி 5 அங். நிறை 105 இருத்தல்).

7. இவ்வறிவித்தலின் பின்னிணைப்பு 'அ' வில் காணப்படும் மாதிரிப் படிவ அமைப்பில் விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்ப மாதிரிப் படிவ அச்சிட்ட பிரதிகள் கிடையா. விண்ணப்பகாரர்கள் தமது படிவங்களைத் தாமாகவே தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர். விதித்த படிவத்துக்கமைய த் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பங்கள் "வான்படை முனைளுன், இலங்கை வான்படை, அ. பெ. 594, கொழும்பு" என்று முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அஞ்சல் உறையின் இடது பக்க மேல்மூலையில் "மருத்துவ உத்தியோகத்தர் பதவிக் கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் 1975 மே பத்தாந் திகதியன்று 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

9. விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) ஆகக்கூடிய உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்/ தொழிற்றுறைத் தகைமைச் சான்றிதழ்.

(இ) விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமுடைய பொறுப்புள்ளவர்கள் இருவரிடமிருந்தாயினும் பெறப்பட்ட இரண்டு நற்குணச் சான்றிதழ்கள்.

(ஈ) விண்ணப்பத்தில் செய்யப்பட்டுள்ள உரிமைக் கோரிக் கைக்கு ஆதாரமாகவுள்ள சான்றிதழ்கள்.

10. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை சுகாதார சேவைப் பணிப்பாளரினூடாக அனுப்புதல் வேண்டும். அவ்வுத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் விடுவிக்கப்படுவார் என்று கூறும் சான்றிதழ் விண்ணப்பத்துடன் இருத்தல் வேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்குச் செயல்வலு கொடுக்கும் பொருட்டு ஏற்கனவே இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படக்கூடிய ஏதேனும் விதிகளுக்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கருமமொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

12. மேலே 6 ஆம் 9 ஆம் பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள தேவைகள் அனைத்துக்கும் பூரணமாக அமைவுறாத விண்ணப்பங்கள் கருத்துக்கு எடுக்கப்படமாட்டா.

13. நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தேடுவதற்கு எந்தவொரு முயற்சியும் செய்யப்படலாகாது என விண்ணப்ப காரர்களுக்கு விசேடமாக மதியுரையளிக்கப்படுகிறது.

தெரிவுகள், நேர்முகப் பரீட்சைகள் முதலியன :

14. பெறப்படும் விண்ணப்பங்களின் தொகையைப் பொறுத்து வான்படைச் சபையொன்று மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடையே தொடக்கநிலைத் தெரிவொன்றை நடாத்தும். அதன் பின்பு அபேட்சகர்களுக்கு ஆணைப்பதவி அளிப்பதன் நோக்கில் அவர்களுடைய தகுதியை மதிப்பிடுதலின் பொருட்டு அவர்கள் சில சோதனைகளுக்கு உட்படுமாறு வேண்டப்படுவர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் இறுதித் தெரிவு பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல் அமைச்சினால் நியமிக்கப்படும் ஒரு தெரிவுச் சபையினால் செய்யப்படும்.

15. அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் நேரமும், திகதியும் இடமும் அவர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இப் பரீட்சை சம்பந்தமாக அபேட்சகர்களினால் செலவிடப்படும் பிரயாணச் செலவு அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா. நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படாத அபேட்சகர்களுக்கு அது பற்றி அறிவிக்கப்படும்.

பி. எச். மெண்டிஸ்,
வான் துணைத் தளபதி,
வான்படை முனைளுன்.

வான்படை தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
அ. பெ. 594,
கொழும்பு.
1975 ஏப்ரில் 4.

பின்னிணைப்பு 'அ'

இலங்கை வான்படையில் ....................பிரிவில் ...............

ஆணைப்பதவிக்கான விண்ணப்பம்

(விண்ணப்பஞ் செய்யும் கிளையின் பெயரை எழுதவும்)

1. குடும்பப் பெயர் :————.
   வேறு பெயர்கள் :————.

2. தற்போதைய முகவரி :————.
   (i) தொலைபேசி எண் :————.
   (ii) அணித்தாகவுள்ள புகையிரத நிலையம் :————.
   (iii) அணித்தாகவுள்ள பொலிசு நிலையம் :————.
   (iv) தந்தி அலுவலகம் :————.

3. நிரந்தர வதிவிடம் :————.
   இங்கு வாழ்ந்துவந்த காலம் :————.

4. விவாக நிலை :————.

5. சமயம் :————.

6. பெற்றோர் பற்றிய விபரங்கள் :—
   (அ) தந்தையின் பெயர் :————.
   பிறப்பிடம் :————.
   பிறப்பின்போது குடிமை :————.
   (ஆ) தாயின் பெயர் :————.
   பிறப்பிடம் :————.
   பிறப்பின்போது குடிமை :————.

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை விபரங்கள் :—
   (அ) பள்ளிக்கூடத்தின் பெயரும் பிறவும் :————.
   (ஆ) சேர்ந்த திகதி :————.
   (இ) விலகிய திகதி :————.

8. பள்ளிக்கூடம் விலகிய நாள்தொடக்கம் செய்த தொழில் பற்றிய விபரங்கள் :—
   (அ) தொழில் கொடுத்தவரின் பெயர் :————.
   (ஆ) தொழிலின் தன்மை :————.
   (இ) தொழிலிலமர்ந்த காலம் :————.

9. இதற்கு முன்பு எப்போதாவது படைச்சேவை ஏதாவதொன்றில் ஏதாவதொரு பதவிக்கென நேர்முகப்பரீட்சை செய்யப்பட்டீரா? உமது விடை 'ஆம்' எனின் விண்ணப்பித்த பதவிகளின் விபரங்களையும் திகதிகளையும் தரவும் : ————.

10. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தின் குற்றத் தீர்ப்புக்கு உட்பட்டீரா? உமது விடை 'ஆம்' எனின் விபரம் தருக :————.

11. இவ்வறிவித்தலின் 6 ஆம் பந்தியில் தேவையென வேண்டப்பட்ட தகைமைகள் :————.
பிறந்த திகதி :————.
வயது :————.
பிறப்பிடம் :————.
குடியுரிமை :————.
பிறப்பின்போது :————.
தற்சமயம் :————.

(அ) தகுதி :————.

(ஆ) உமது கல்வித் தகைமைகள் :————.
(அதாவது—நீர் தகைமை பெறும் 8ஆம் பந்தி வாசகம்)

(இ) உயரம் :— ..............அடி ..............அங்.

(ஈ) மார்பு :— ..............அங்.

(உ) நிறை :— ..............இருத்தல்.

12. மேலதிகத் தகைமைகள் (விண்ணப்பகாரர்கள் பின்வரும் கூடுகளில் செய்யும் கோரிக்கைகளை உறுதிப்படுத்தக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்) :————.

13. விளையாட்டுகளில் ஈட்டிய சாதனைகள் பற்றிய விபரங்கள் : ————.

(குழுமங்கள், போட்டிகள் பற்றிய விபரங்களையும் ஈட்டிய தரங்களையும் திகதிகளுடன் தருக) :————.

14. பள்ளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகங்களில் ஈட்டிய ஏனைய சாதனைகள் :————.

15. ஒழுங்கான அல்லது தொண்டர் படைச்சேவை ஏதாவது ஒன்றில் அல்லது சாரணச் சிறுவர் அமைப்பில் ஆற்றிய சேவை பற்றிய விபரங்கள் :————.

16. விசேட தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.

17. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவைகள் (படிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்) :————.

18. சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர்கள் :————.

19. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற சாதனங்கள் :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

4–7—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

**களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை தொட்டமுனை வடக்கு ப. இ. உ. வின் பிரிவில் களுத்துறை பத்தை கிராம சபைப் பிரிவிற்குள் திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை தொட்டமுனை வடக்கு ப. இ. உ. வின் பிரிவில் மகா வஸ்கடுவை, தெதியாவலை, உக்கல்படை, எத்தனமடைல, பலாத்தொட்டை, மகா ஹீனற்றியங்கலை, நாகொடை, (ஒரு பகுதி) கலமுல்லையும் அயத்தகமை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்குள்ளான களுத்துறை பத்தை, கிராம சபைப் பகுதியில் திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளுக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1975 மே 5 ந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக் கூடியதாக அரசாங்க அதிபர், கச்சேரி, களுத்துறை என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடிய முறையில் அனுப்பப்படல் வேண்டும்.

3. இப்பதவிக்குச் சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும், ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கும் ரூபா 10/- வீதம் வழங்கப்படும்.

3. தகைமைகள்.—தாம் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 30 வயதிற்குக் கீழ்ப்படாததும் 55 வயதிற்கு மேற்படாததுமான வயது ;

(ஆ) சிறந்த நற்குணமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும் ;

(இ) விண்ணப்பதாரர் இப்பிரதேசத்தில் நிரந்தர வாசியாகவும்;

(ஈ) சிங்களத்தில் அல்லது தமிழில் குறைந்த பட்சம் சிரேட்ட பாடசாலைத் தாராதரப் பத்திரப் பரீட்சை எண்கணிதம் அல்லது நுண்கணிதத்தோடு அல்லது க.பொ.த. (சாதா) பரீட்சையில் ஆறு பாடங்களில் (2 தடவைக்கு மேற்படாத) சிங்களம் அல்லது தமிழில், எண்கணிதம் அல்லது நுண்கணிதத்துடன் சித்தியடைந்திருத்தல்;

(உ) மாதாந்த வருமானம் ரூபா 200 அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழிகளின் பிரதிகளை இணைக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) சித்தியடைந்துள்ள மிக உயர்ந்த பரீட்சை பற்றிய சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணம் பற்றி அண்மையில் பெறப்பட்ட இரு சான்றிதழ்கள்.

(ஈ) இப் பிரதேசத்தில் வசித்தல் குறிக்கும் கிரா. சேவ. சான்றிதழ்.

(உ) வருமானத்தைக் குறிக்கும் கிரா. சேவ. சான்றிதழ்.

5. அரசாங்க சேவகர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், உள்ளூராட்சி, சேவகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர். எனவே அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பீ. ஜீ. புஞ்சிஹேமா,
களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
களுத்துறை,
1975 ஆண்டு மார்ச் மீ 21 ந் உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை தொட்டமுனை வடக்கு ப. இ. உ. வின் பிரிவில் களுத்துறை பத்த கிராம சபைப் பிரிவிற்குள் திடீர் மரண விசாரணையாளர் பதவி**

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் (குடும்பப் பெயருடன்) பெரிய எழுத்துக்களில் :————.
2. முகவரி :————.
3. நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசித்த காலமும் :————.
4. (அ) விண்ணப்ப முடிவுத் திகதியன்றுக்குச் சரியான வயது :————.

(ஆ) பிறப்பு இடமும். திகதியும் :————.

5. விவாகமானவரா, விவாகமாகாதவரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. தற்போதைய தொழில் :————.
8. முன்னர் சேவையில் இருந்திருப்பின் அதுபற்றிய விபரம் : ————.
9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும் பெறுமதியும் : ————.
10. கடனாளியாக இருப்பின் அது பற்றிய விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவரா ? ஆமெனில் விபரங்கள் தருக : ————.
12. இப்பதவிக்காக வேறு ஏதாவது விசேட தகைமைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

4–16—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

## அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

### உப அஞ்சலதிபர் பதவி மயிலகஸ்தென்ன தரம் 'ஏ' மயிலகஸ்தென்ன உப அஞ்சலதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. வயதெல்லை.—விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாகவும், இருபாலாரைச் சேர்ந்தவர்களாகவும் 15.04.1975 இல் 21 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.

2. கல்வியும் மற்றும் இதர தகைமைகளும்

(i) சிங்களம்/தமிழ்மொழி, கணக்கு/தூயகணிதம்/வர்த்தகக் கணிதம்/உயர்கணிதம்/கணக்கியல் ஆகிய பாடங்கள் உட்பட குறைந்தது மூன்று பாடங்களில் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சையில்/க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(ii) வதிவுத் தகைமைகள்.—விண்ணப்பதாரிகள் பதுளை நகர எல்லைப் பிரதேசத்தில் பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேலான காலவெல்லையில் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருத்தல் வேண்டும். மயிலகஸ்தென்ன உப அஞ்சலுவலகத்திற்கு அண்மையிலுள்ள வட்டாரம் அல்லது வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) அலுவலக இடவசதி—தற்போதிருக்கும் அலுவலகத்திற்கும் வெகு அண்மையில் உப அஞ்சலுவலகத்தை அமைப்பதற்கான ஒரு தகுதிவாய்ந்த கட்டடத்தை விண்ணப்பதாரிகள் அளித்தல் வேண்டும்.

3. வேதனம்.—மாதமொன்றுக்கு திரட்டிய வேதனமாக ஆகக் குறைந்தது ரூபா 233/- கொடுக்கப்படும். இவ்வுப அஞ்சலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் தொகைக்கேற்ப இவ்வேதனவெல்லை அதிகரிக்கப்படும். வாழ்க்கைப்படி, விசேட வாழ்க்கைப்படி திரட்டிய வேதனத்தில் உள்ளடக்கப்பட்டதால் இவை புறம்பாக வழங்கப்படமாட்டா.

4. விண்ணப்பங்கள்.—2 ரூபா பெறுமதியான முத்திரைகளைக் கையளித்ததன்பேரில் பண்டாரவளை பகுதி அஞ்சலுவலகக் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் பெறப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்களைச் செய்தல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15.04.1975 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இவரது அலுவலகத்தை அடையும்வண்ணம் அனுப்பப்படல் வேண்டும். பண்டாரவளை பகுதி அஞ்சலுவலகக் கண்காணிப்பாளரிடமிருந்து மேற்கொண்ட விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஆர். எம். ஜயவர்த்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைத்தொடர்புப் பணிப்பாளரும்.
(எஸ் டி எஸ் பி டபிள்யூ 1493/75)

4–76—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

## அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

### உப அஞ்சலதிபர் பதவி—மகையாவ—தரம் 'ஏ'

மகையாவ உப அஞ்சலதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை.—விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாகவும், இருபாலாரைச் சேர்ந்தவர்களாகவும் 02.05.1975 ல் 21 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.

2. கல்வியும் மற்றும் இதர தகைமைகளும்

(i) சிங்களம்/தமிழ்மொழி, கணக்கு/தூயகணிதம்/வர்த்தகக் கணிதம்/உயர் கணிதம்/கணக்கியல். ஆகிய பாடங்கள் உட்பட குறைந்தது மூன்று பாடங்களில் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சையில்/க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(ii) வதிவுத் தகைமைகள்.—விண்ணப்பதாரிகள் கண்டி நகர எல்லைப் பிரதேசத்தில் பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேலான காலவெல்லையில் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருத்தல் வேண்டும். இவ்வுப அஞ்சலுவலகத்திற்கு அண்மையிலுள்ள வட்டாரம் அல்லது வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) அலுவலக இடவசதி.—மகையாவாவிற்கு வெகு அண்மையில் எல்லோரும் இலகுவில் செல்லத்தக்க முறையில் உப அஞ்சலுவலகத்தை அமைப்பதற்கான ஒரு தகுதிவாய்ந்த கட்டடத்தை விண்ணப்பதாரிகள் அளித்தல் வேண்டும்.

3. வேதனம்.—மாதமொன்றுக்கு திரட்டிய வேதனமாக ஆகக் குறைந்தது ரூபா 233/- கொடுக்கப்படும். இவ்வுப அஞ்சலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் கொடுத்தல் வாங்கல்களின் தொகைக்கேற்ப இவ்வேதனவெல்லை அதிகரிக்கப்படும். வாழ்க்கைப்படி, விசேட வாழ்க்கைப்படி திரட்டிய வேதனத்தில் உள்ளடக்கப்பட்டதால் இவை புறம்பாக வழங்கப்படமாட்டா. நிரந்தர உபஅஞ்சலதிபர்கள் விடுதலைப்படி பெற உரித்துடையவராவர். படியாக 250/- ரூபாவும் அதற்குக் குறைவாகவும் பெறும் உபஅஞ்சலதிபர்கள் (சகல படிகளும் உட்பட) ரூபா 7.50 சதம் படியாகப் பெறுவர்.

4. விண்ணப்பங்கள்.—கண்டி (மத்திய) பகுதி அஞ்சலுவலகக் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் ரூபா 2/- பெறுமதியான முத்திரைகளைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெறப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்களைச் செய்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 02.05.1975 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இவரது அலுவலகத்தை அடையும் வண்ணம் அனுப்பப்படல் வேண்டும். கண்டி (மத்திய) பகுதி அஞ்சலுவலகக் கண்காணிப்பாளரிடமிருந்து மேற்கொண்ட விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ஆர். எம். ஜயவர்த்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைத்தொடர்புப் பணிப்பாளரும்.

4–77—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

## இலங்கை கடற்படையில் கப்பற்றுறை புனைகையர் (சிவில்) பதவிகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை கடற்படையின் நிலையான படையில் கப்பற்றுறைப் புனைகையர் (சிவில்) பதவிக்கு, கட்டட நிர்மாண அனுபவமுடைய ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அபேட்சகர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்துபவர்களாகவும் தகைமைகளை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. எல்லா விண்ணப்பக்காரரும் கீழே கூறப்பட்டிருக்கும் எல்லா நிபந்தனைகளையும் கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) (i) சிங்கள மொழி/அல்லது தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது, இலங்கை க. பொ. த. (சாதாரணதர)ப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் பின்வருவனவற்றில் ஏதாவது 'இரண்டுக்குக் குறையாத பாடங்களில் திறமைச் சித்திபெற்று இருத்தல் வேண்டும்.

(i) தூய கணிதம் ;
(ii) பிரயோக கணிதம் ;
(iii) பௌதிகவியல் ;
(iv) இரசாயனவியல் ;
(v) உயர்தர கணிதம் ;
(vi) கேத்திர கணித/இயந்திர கணித வரைதல்.

(இ) கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தொழில்நுட்பத் தகைமைகளில் ஒன்றை உடையவராக இருத்தல் வேண்டும் :—

(i) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் கனிட்ட தொழில் நுட்ப அலுவலர் (சிவில்) பயிற்சியை (அல்லது இதற்குச் சமமான தகைமைகளைப் பெற்றிருத்தல்) வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க தொழில் நுட்பத் திணைக்களமொன்றில் கூட்டுத்தாபனமொன்றில் அல்லது நன்கு மதிக்கப்பட்ட பிரத்தியேக உடன்படிக்கையாளரால் நடாத்தப்படும் சிவில் இயந்திர வேலைத்தலமொன்றில் மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் மாலை நேரப் பயிற்சியினை, கட்டட நிர்மாணத்தில்/படத் தயாரிப்புப் பொறியியலில்/சுகாதாரப் பொறியியலில் வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும். அத்துடன் பொறுப்புவாய்ந்த முறையில் வேலைகளை மேற்பார்வை செய்வதில் நாலுவருட விணைத்திறமை அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) அரசாங்க சிரேட்ட தொழில் நுட்பத் தாபனமொன்றில் கனிட்ட தொழில் நுட்ப அலுவலர் பட்டப் (சிவில்) பயிற்சியை வெற்றிகரமாக முடித்து இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க தொழில் நுட்ப அலுவலகத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபை அல்லது தனியார் தாபனத்தில் மேற்பார்வை முறையில் மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iv) உதவிப் பரிசோதகர் உயர்ச்சிக்கென பரீட்சைத் திணைக்களத்தினுல் நடாத்தப்படும் தொழில் நுட்ப அலுவலர் பயிற்சியில் பின்வரும் பாடங்களில் குறைந்தது ஐந்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் :—

கட்டட நிர்மாணமும் பராமரிப்பும்

பரிமாண மதிப்பீடுகளை எடுத்தல்

சிறப்ப வகைப்பாடுகளும் மாதிரி வரைதல்களும்.
அளப்பனவுக்கும் மட்டம்பார்த்தலுக்குமான விளக்கம்.
அளப்பனவுக்கும் மட்டம் பார்த்தலுக்குமான விளக்கம் (வெளிவேலை).
நீர்வழங்கலும் வடிகாலமைப்பும்.
பாலங்களமைப்பும் பாரியகட்டடங்களமைப்பும்.
வீதிகளமைப்பும் பராமரிப்பும்.
அத்துடன் பலமான கொங்கிறீற்று வேலை மேற்பார்வையில்/உருக்குத் தயாரிப்பு வேலையில்/கட்டடப் பராமரிப்பு வேலையில்/மதிப்பிடுவதிலும் பரிமாண அளவுகளில் உண்டியல்களைத் தயாரிப்பதிலும்/நிர்மாண அமைப்பு முதலியவற்றில் நேரடித் தொழில் மேற்பார்வை முறையில் மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஈ) 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ந் திகதி 20 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும் ;

(உ) பின்வரும் மிகக் குறைந்தளவு உடற் தகைமைகளையாவது உடையவராக இருத்தல் வேண்டும் :—

(i) உயரம் : 5 அடி 4 அங்குலம்

(ii) நிறை : 105 இருத்தல்

(iii) மார்பளவு (விரியாதளவு) : 22 அங்குலம்

(ஊ) கடற்படைத் தளபதியைத் திருப்திப்படுத்தும் வகையில் வைத்திய பரீட்சை ஒன்றில் சித்தி பெறுதல் வேண்டும்.

3. தெரிவுக்கு முன்னர் பரீட்சை ஒன்றிற்கு ஈடுபடும்படி அபேட்சகர் வேண்டப்படுவர்.

4. நியமனத்திற்கு முன்னர் விசேட கடமைகளில் 2 தொடக்கம் 4 கிழமைகளுக்கு ஆரம்ப பயிற்சியொன்று அபேட்சகர்களுக்கு அளிக்கப்படும்.

5. காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் ஒழுங்கு விதிகளுக்கு அமையவும், கடலோடிகளின் ஆட்திரட்டலுக்கமையவும், 1950 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சேவை ஒழுங்கு விதிகளுக்கு அமையவும், (1950 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ஆந் திகதிய 10,187 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது) சேவையில் சேர்க்கப்பட்ட திகதிகளிலிருந்து அபேட்சகர்களின் சேவை கணிக்கப்படும். நிலையான கடற்படையில் கட்டாய சேவைக்காலமானது எந்தவொரு கடலோடிக்கும் தற்பொழுது 12 வருடங்களாகும். 20 வருடங்களுக்கு மேற்படாத, மேலும் ஓர் காலத்திற்குத் திரும்பச் சேவையில் சேர்ப்பதற்கு கடற்படைத் தளபதியினுல் அவர் அனுமதிக்கப்படலாம். 22 வருடங்களான ஓர் தொகை காலத்திற்கு ஓர் மாலுமி சேவை புரியச் சாதாரணமாக அனுமதிக்கப்படலாம்.

6. இத்தகைய பதவிகளுக்கான சம்பள விகிதங்களுக்கு 1970 ஆம் ஆண்டின் கடற்படைச் சம்பளக் கோப்புப் பொருந்துவனவாகும். சம்பளக் கோப்பின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டவாறு இப்பதவிகளுக்குப் பொருந்துவனவாகும் :—

| | பிரிவு I சம்பள அளவு | விசேட பிரிவு சம்பள அளவு |
|---|---|---|
| புனைகையர் வகுப்பு III அல்லது II | 4,920–10 × 90 —5,820 | — |
| புனைகையர் வகுப்பு I அல்லது பிரதான புனைகையர் | — | 5,940–10 × 90–6,840 |
| பிரதான மாஸ்டர் புனைகையர் | — | 6,480–10 × 144–7,920 |

பின்வரும் சம்பளப்படிகளும் வழங்கப்படும் :—

(அ) விவாகப்படி.—அரசாங்க சேவையில் பெறுவதுபோல் தவணைகளும், நியதிகளும், விகிதங்களும் இருக்கும் ;

(ஆ) சலவைப்படி.—(i) ஒரு மாலுமி உண்டிச்சாலை ஒன்றில் வதிபவரானுல் அவருடைய கடற்படை உடைகளை இலவசமாகக் கடற்படைச் செலவில் சலவை செய்வதற்குத் தகுதியுடையவராவர் ;

(ii) ஒரு மாலுமி வெளியில் வதிபவரானுல் அவருடைய கடற்படை உடைகளைச் சலவை செய்வதற்கான செலவுப்படியைப் பெறுவதற்குக் கடற்படைத் தளபதியினுல் அனுமதி வழங்கப்படுமானுல் அதைப்பெறத் தகுதியுடையவராவர் ;

(இ) நன்னடத்தைப்படி.—நன்னடத்தைப்படி உள்ள ஒவ்வொரு மாலுமிக்கும் நன்னடத்தைப்படி வழங்கப்படும். அத்தகையவற்றில் பின்வரும் ஓர் விகிதப்படி அவருக்கு உரியதாக இருக்கும் :—

| | ஒருநாளைய விகிதங்கள் ரூ. ச. |
|---|---|
| (i) 4 வருடத் தகைமைச்சேவை முடித்த ஒரு பட்டிக்கு ... | 0 25 |
| (ii) 8 வருடத் தகைமைச்சேவை முடித்த இரண்டு பட்டிகளுக்கு ... ... | 0 50 |
| (iii) 12 வருடத் தகைமைச்சேவை முடித்த மூன்று பட்டிகளுக்கு ... ... | 0 75 |

பிரசுரிக்கப்பட்ட இத்தகைய பதவிகளின் தரம் (கடற்படையில்) பெற்றி ஆபீசருக்கும், (தரைப்படையில்) சார்ஜன்றுக்கும் சமானமாக இருக்கும். புனைகையர், இப்பதவியிலிருந்து பிரதான மாஸ்டர் அலுவலர் (கடற்படையில்) பதவிக்கு உயரலாம். இது ஆணையில்லா விகிதமாக தரைப்படையிலுள்ள I ஆம் வகுப்பு ஆணை அலுவலர் பதவிக்குச் சமானமாக இருக்கும். ஒரு ஆணை தேவைப்படுமெனக் கண்டால் தொழில்நுட்ப அலுவலர் போல் ஆணைப் படுத்த அவர்களுக்குச் சந்தர்ப்பமும் உள்ளது.

7. பின்வரும் விதிகள் ஆட்சேர்த்தல் விண்ணப்பங்களுக்கு எடுத்தாளப்படும் :—

(அ) இந்த அறிவித்தலின் கீழ் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போல் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்திலுல் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள், ஆட்சேர்த்தல் அலுவலர், இலங்கை கடற்படை, த. பெ. இல. 593, கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தபாலுறையில் இடது மேற்பக்க மூலையில் "ஆட்சேர்த்தல் புனைகையர் கிளை" என குறிக்கப்படுவதுடன் 1975 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ந் திகதி பி. ப. 3.30 மணிக்கு முன்னர் கடற்படைத் தலைமை அலுவலகத்தை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையாளரின் விண்ணப்பங்கள், அவ்வத்திணைக்களத் தலைவருக்கு ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டால் அத்திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்படுவார் என்ற தொடர்புக் கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும் ;

(இ) விண்ணப்பங்கள் பின்வரும் பிரதிகளுடன் மட்டும் இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(i) பிறப்புப் பதியப்பட்ட பத்திரங்கள் அல்லது விண்ணப்பகாரரின் பிறப்புப் பதியப்படாத காரணத்திற்காக பெரும்பாகப் பதிவுகாரரினுல் வழங்கப்பட்ட வயதினைக்காட்டும் விசேட பத்திரம் ;

குறிப்பு.—ஞானஸ்நானப் பத்திரங்கள், உதவி நன்கொடைப் பாடசாலைகளுக்காக ஒழுங்குப் பிரமாணங்களின் கட்டளைக்காக வழங்கப்பட்ட பிறப்புப் பத்திரங்கள், சாதகக் குறிப்புக்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா ;

(ii) பெற்றுள்ள உயர்தர கல்வித்தகைமைகளுக்கான பத்திரங்கள், அத்துடன் இவ்வறிவித்தலின் 2(அ) வில் வேண்டப்பட்ட கல்வித் தகைமைகளை நிரூபிப்பதற்குரிய பத்திரங்கள் ;

(iii) இவ்வறிவித்தலின் 2(இ) இல் வேண்டப்பட்ட நியதிகளுக்கு இணங்க, தேவையானவிடத்து, தொழில் நுட்பக் கல்வித் தகைமைகளுக்கான பத்திரங்கள் ;

(iv) அண்மையில் பெற்ற நான்கு நற்சாட்சிப்பத்திரங்கள். அவற்றில் ஒன்று விண்ணப்பகாரரின் தகைமைகளையும், நற்சான்றினையும், நியமனத்திற்குத் தகுதியென்பதனையும் குறிப்பிட்டு எழுதப்பட்ட அப்பகுதிக் கிராமசேவையாளரின் நற்சான்றிதமாக இருக்கவேண்டும். இன்னொன்று தற்பொழுது அல்லது கடைசியாக வேலைகொடுத்தவரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும் ;

(v) விண்ணப்பகாரரின் கடைசிப் பிறந்த தினத்திலன்றோ அதற்குப் பிறகோ எடுக்கப்பட்ட புகைப் படமொன்று இணைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பகாரர் புகைப்படத்தின் பின்பக்கத்தில் கையெழுத்தை இடவேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பகாரரின் பெயர் விண்ணப்பத்தில் இருப்பது போல பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலும், கல்வித் தகைமைப் பத்திரங்களிலும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். விண்ணப்பத்திலும் புகைப்படத்திலும் உள்ள கையொப்பங்கள் விண்ணப்பகாரரின் வழக்கமான கையொப்பமாக இருக்கவேண்டும்.

8. 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாட்டிற்கும், வேறு ஏதாவது ஒழுங்குப் பிரமாணங்களுக்கும், அதற்குச் சமானமாகக் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் அறிவுறுத்துரைக் கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி ஒழுகுவதாகத் தெரிவு செய்யப்பட்டு நிலையான கடற்படையில் சேர்க்கப்படும் அபேட்சகர்கள் எழுத்து மூலமான சான்று அளித்தல் வேண்டும்.

9. முன்னைய சேவையாளர் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்குங்கால், மேலே காட்டப்பட்ட பொது நிபந்தனைகளுக்குப் பதிலாகச் சலுகை பெறவேண்டின் பின்வருவனவற்றை உடையவராக இருத்தல் வேண்டும் :—

(i) பிரித்தானிய ஐக்கிய இராச்சிய படைச்சேவையில் அல்லது இலங்கை பாதுகாப்புப் படையில் ஒரு வருட சேவைக்குக் குறையாதிருக்க வேண்டும் ;

(ii) போர்ப்படையில் " மிகவும் நன்று " என்றதற்குக் குறையாத ஒழுக்கவியலுக்கு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும் ;

(iii) இணைக்கப்பட்ட சேவைத் தொகையில் சரியான வருடங்கள், மாதங்கள், நாட்கள் இருக்க வேண்டும்.

10. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மட்டும் கல்வித் தகைமைப் பத்திரங்களினதும் நற்சாட்சிப் பத்திரங்களினதும் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் இணைக்கப்படும் எந்தவொரு மூலப்பிரதிச் சான்றிதழும் தொலைந்து போனால் இலங்கை அரச கடற்படை அதற்குப் பொறுப்புடையதாகாது.

11. விண்ணப்பம் ஒன்று தொலைந்து போவதினாலோ அல்லது தபால் பகுதியினால் தாமதமாகுவதினாலோ எழும் முறைப்பாடு பரிசீலனை செய்யப்படமாட்டாது. அபேட்சகர் தம் விண்ணப்பங்களைத் தாமதிப்பது அவர்களின் சொந்தப்பிழையாகும்.

12. எல்லா விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும்.

13. முடிவுத் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரினால் விண்ணப்பம் ஏற்கப்பட்டு காலதாமதத்திற்கான காரணம் தொடர்பாக விதப்புரை அனுமதியுடன் அத்திணைக்களத் தலைவர் குறித்தாலன்றி திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு முடிவுத் திகதிக்குப் பிந்தி வரும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

14. தகைமையெனக் காணப்படும் அபேட்சகர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகளுக்கு கடற்படைத் தெரிவுச் சபையின் முன் சமூகமளிக்கும்படி வேண்டப்படுவர். திகதிகளும் நேரங்களும் கடிதமூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்த்தலுக்குத் தகுதியெனக் காணப்படும் அபேட்சகர்கள் நியமனத்திற்கு முன்னர் ஒன்று அல்லது மேற்பட்ட வைத்தியப் பரீட்சைகளுக்கு கொழும்புக்கு வரும்படி வேண்டப்படுகின்றனர். பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு செலவுகளோ நேர்முகப் பரீட்சைகளுக்கு அல்லது வைத்தியப் பரீட்சைகளுக்கு வருவதற்காக கொடுக்கப்படமாட்டா.

15. ஒருவர் அபேட்சகரை விரும்பி விதப்புரை நல்கி ஒரு நற்சான்றிதழை வழங்கலாமே அன்றி அபேட்சகர் தெரிவு செய்யப்படுவதற்கு பேச்சு மூலமோ அல்லது உதவி தேடுவதன் மூலமோ உதவ முன்வரின் அபேட்சகரின் தகைமை நிராகரிக்கப்படும்.

16. தெரிவுக்கு முன்னர் தகைமையற்றவரெனக் காணப்பட்டால் அதாவது விண்ணப்பத்தில் ஏதாவது முறைப்பாடுகள் பிழையெனக் கண்டு பிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரின் தகைமை நிராகரிக்கப்படும். நியமனத்திற்குப் பின்னர் காணப்பட்டால் ஒழுங்கு நடவடிக்கையும் கடற்படையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவர்.

டீ. பி. குணசேகரா,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு 1, 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

மாலுமிகளுக்கான வெற்றிடங்கள்—இலங்கை கடற்படை

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. தபால் முகவரி :————.

3. மாகாணம் :————.

4. தேர்தல் தொகுதி :————.

5. பிறந்த திகதி :————.

6. 1975 ஏப்ரல் 1 ந் திகதி வயது :————.

7. சித்தியடைந்த கல்வித்தகைமைகளும் பாடங்களும், திகதிகளும் :————.

8. படித்த பாடசாலைகள் :————.

9. வேறு ஏதாவது கல்வித் தகைமைகள் :————.

10. விளையாட்டின் பெறுபேறுகள் :————.

11. பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து செய்த தொழில் (முழு விபரங்கள் தருக) :————.

12. தற்போதைய தொழில் :————.

13. உயரம் :————. அடி———— அங்குலம்.
நிறை :———— இறாத்தல்.
மார்பளவு :———— அங்குலம்.

14. நாட்டினம் :————.

15. அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :————.

16. கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை, தொண்டர் படையில் முன்னர் சேவையாற்றியிருந்தால் அதன் முழு விபரங்களும் திகதிகளும், அப்பதவிகள் நிகழ்ந்த விதங்களும் :————.

17. விலகியபொழுது/நீக்கப்பட்டபொழுது ஒழுக்கம் :————.

18. வேறு ஏதாவது தொடர்புள்ள விபரங்கள் :————.

19. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டவர்களின் பெயர்களும் பதவிகளும் :

(அ) ........................ இன் கிராமசேவையாளர்

(ஆ) ........................................

(இ) ........................................

(ஈ) ........................................

என்னால் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்குச் சரியானவையென்று, எனது நம்பிக்கையின் பேரில் உறுதியளிக்கின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-14—04.04. 75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

### அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

#### ஆமச்சர் சுற்றுநர் பதவி—பொறியியற் பகுதி

அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் பொறியியற் பகுதியிலுள்ள குளிரூட்டற் பிரிவில் "தேர்ச்சிபெற்ற தொழிலாளி—வகுப்பு I, தரம் II, ஆமச்சர் சுற்றுநர்" பதவிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து பிரதான தொலைத்தொடர்புப் பொறியியலாளர், 5 வது மாடி, அ.தொ. தலைமையகக் கட்டடம், கொழும்பு 1 எனும் முகவரியை 1975.04.28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அடையுமாறு பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். இவ்வலுவலகத்திலிருந்து விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது. "ஆமச்சர் சுற்றுநர் பதவி" எனும் சொற்கள் விண்ணப்பத்தை உள்ளடக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல்மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

2. வேதன அளவுத் திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் ஆண்டொன்றுக்கு ரூபா 3,000—15 × 90—ரூபா 4,350/- ஆகும்.

3. நியமன நியதிகள்.—இப்பதவி நிரந்தரமானதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுதொகை அளித்தல் வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையிலிருக்கும்.

குறிப்பு.—(i) 31.12.71 க்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஓய்வூதியப் பதவி வகுத்திருப்பின், அவர் இப்பதவியிலும் தொடர்ந்து ஓய்வூதிய உரிமைகளை அனுபவிப்பர்.

குறிப்பு.—(ii) ஓய்வூதியப் பதவி வகிக்கும் ஓர் அரச உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படின், அவர் குறிப்பிட்ட காலவெல்லையொன்றுக்கு பதிற் கடமையாற்றும் அடிப்படையில் நியமனம் பெறுவர்.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் கொண்டதற்கு திருப்தியான சான்று பகர்தல் வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமுடையவரென்றும் ஆரோக்கியமுடையவரென்றும்.

(ஆ) 28.04.1975 ம் திகதியன்று 21 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவரென்றும். (அரசசேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தா)

(இ) ஆங்கிலம் அல்லது சிங்களம்/தமிழ்மொழியில் 7 ம் வகுப்சித்திபெற்றவரென்றும்.

(ஈ) (i) வகுப்பு II ஐச் சார்ந்த ஆமச்சர் சுற்றுநர் தரத்தில் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றிருந்தவரென்றும்: (இதற்கு அத்தாட்சியாக சான்றிதழ் காட்டல் வேண்டும்)

(ii) உபயோகத்திலிருக்கும் பல்வேறு வகையினவான கம்பிகளின் பெயர்கள், அளவுகள் பற்றிப் பரிச்சயமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) மின்பாயாக் காப்பீட்டுப் பரீட்சைகளிலும், ஆமச்சர்களை உலாச்செய்து வார்னிஷ் பூசுதலிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) பூரிதமாக்குதலிலும், பூரிதமாக்கும் இயந்திரம் பற்றியும் அறிவு உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.

(v) திசைமாற்றிகள் திருத்துதலில் அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

(vi) எல்லாவகையான ஆமச்சர்களையும் பரீட்சித்துப் பார்க்கவும் பிழைகளைக் கண்டுபிடிக்கவும் வல்லவராக இருத்தல் வேண்டும்.

(vii) ஒரு ஆமச்சரைப் பிரிக்கவும், மீளச் சுற்றவும் வல்லவராக இருத்தல் வேண்டும்.

(viii) சாதாரண ஆமச்சரை சுற்றும் திறமையுடையவரென்பதை நிரூபிப்பதற்கு செய்முறைப் பரீட்சையொன்றுக்கு தோற்றுவதற்கு விருப்புள்ளவரென்றும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் (மு.கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுக்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ii) மிக உயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(iii) வியாபார, தொழினுட்ப தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

(iv) சிங்கள மொழியில் தேர்ச்சிபெற்றதைக் காட்டும் உயர்ந்த சான்றிதழ்.

(v) விண்ணப்பதாரியின் குணம், தகுதி, திறமை, பதவிக்கு நியமனம் பெறும் தகுதி ஆகியன பற்றி சான்றளிக்கும் அண்மையில் பெறப்பட்ட மூன்று சான்றிதழ்கள். (ஏற்கனவே அரச சேவையிலுள்ளவர்களுக்கு இச் சான்றிதழ்கள் காட்டத் தேவையில்லை)

குறிப்பு.—இப் பிரதிகள் விண்ணப்பதாரிகளுக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது மூலச் சான்றிதழ்களை கோரப்பட்டால் சமர்ப்பிக்கலாம்.

6. அரச சேவையிலுள்ள ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

7. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் பெறப்படும் திணைக்கள ஊழியர்களது விண்ணப்பம் சார்பாக, இவ்விண்ணப்பங்கள் ஊழியர்களினால் தலைவர்களுக்கு குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதென்றும் தான் இவ்விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறேனென்றும் தலைவர் ஓர் சிபாரிசை விண்ணப்பத்தில் செய்தாலொழிய இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. விண்ணப்பங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படமாட்டாது. வேண்டப்படும் தேவைகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. விண்ணப்பங்களும் அவை சார்பான கடிதத் தொடர்புகளும் பிரதான தொலைத்தொடர்புப் பொறியியலாளரென முகவரியிடப்பட வேண்டுமேயொழிய இத்திணைக்களத்தில் பணிபுரியும் வேறெந்த நபரின் பெயருக்கு அனுப்பப்படலாகா.

எச். டி. எஸ். ஏ. குணவர்த்தன,
பிரதான தொலைத்தொடர்புப்
பொறியியலாளர்.

பிரதான தொலைத்தொடர்புப்
பொறியியலாளரின் அலுவலகம்,
5 வது மாடி,
அ.தொ. தலைமையகக் கட்டடம்,
கொழும்பு 1,
1975.03.12.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் பொறியியற் பகுதியில் தேர்ச்சி தொழிலாளி வகுப்பு I, தரம் II
ஆமச்சர் சுற்றுநர் பதவி

1. பெயர் முழுமையாக (தனி எழுத்துக்களில்) :————.
   (அ) சொந்தப் பெயர் :————.
   (ஆ) இதர பெயர்கள் :————.

2. (அ) நிரந்தர முகவரி :————.
   (ஆ) அலுவலக முகவரி :————.

3. (அ) பிறந்த திகதியும் இடமும் :————.
   (ஆ) 1975.04.28 இல் வயது :— திகதி————மாதம்———— வருடங்கள்————.
   (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைத்தல் வேண்டும்).

4. (அ) தேசிய இனம் :————.
   (ஆ) (i) பாரம்பரையாகவா :————.
   (ii) பதிவு மூலமாகவா :————.

5. விவாகமானவரா அல்லது தனிப்பட்டவரா :————.

6. பின்வருவோரின் பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரியின் பிதாவின் :————.

(ஆ) விண்ணப்பதாரியின் பிதாவழிப்பேரன் :————.

(இ) விண்ணப்பதாரியின் பிதாவழிப் பூட்டன் :————. (விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்திருந்தால், கூடுகள் (அ) அல்லது (ஆ) (இ) நிரப்பப்படல் வேண்டும். இவர் இலங்கையில் பிறவாதிருப்பின், கூடுகள் (அ) (ஆ) அல்லது) (ஆ) (இ) நிரப்படல் வேண்டும்.)

7. (அ) கல்வித் தகைமைகள் :————.

(ஆ) தொழிநுட்பத் தகைமைகள் :————. (கசெற் அறிவித்தலின் பிரிவு 4 இன் பொருத்தமான பந்தியின்படி சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

8. (அ)முன்னர் அரசசேவையில் ஆற்றிய விபரங்கள் அதிலிருந்து விலகிய காரணங்கள் :————.

(ஆ) யுத்த சேவைகளில் (ஏதும்) ஈடுபட்டிருப்பின் விபரமும், அதிலிருந்து விலகிய காரணமும் :————.

9. சட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் குற்றச்சாட்டிற்காக குற்றவாளியாகக் காணப்பட்டீரா ; அங்ஙனமாயின் அவற்றின் விபரம் :————.

10. குணச்சான்றிதழ்கள் அளித்தவர்களின் பெயர்கள், பதவிப் பெயர்கள் :—

1.

2.

3.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். தெரிவுக்கு முன்னர் இவ்விண்ணப்பத்தில் ஏதேனும் தவறுகள் காணப்படின் நான் தகைமையற்றவனுக்கப் படுவேனென்பதையும், தெரிவுக்குப் பின்னர் காணப்படின் எவ்வித நட்டஈடின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேனென்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

திணைக்களத் தலைவர் சான்று பகர்தல்

..............................இத்திணைக்களத்தில் பணிபுரிந்தவரென்றும், அவரது சேவை, நடத்தை திருப்திகரமாக இருக்கிறதென்றும் இத்திணைக்களத்தில் கிடைக்கப்பெறும் பதிவேடுகளின் பிரகாரம் இவ்விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை யென்றும், கசெற் அறிவித்தலின் பந்தி 4 இன் படி இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளாரென்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

கையொப்பம் :————.
பெயர் :————.
பதவிப்பெயர் :————
................... க்காக
திணைக்கள / கூட்டுத்தாபனத்
தலைவரின் பதவிப் பெயர் :————.

திகதி :————.

4-9—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

அத்திடிய உப அஞ்சலதிபர் பதவி—தரம் ஏ

அத்திடிய உப அஞ்சலதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை.—விண்ணப்பதாரிகள் இலங்கையராகவும் 31.03.1975 இல் 21 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவ ரிருத்தல் வேண்டும்.

2. கல்வியும் இதர தகைமைகளும்.—(i) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்/க. பொ. த. ப. (சாதாரண) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம்/தூயகணிதம்/வர்த்தக கணிதம்/உயர்தர கணிதம்/பிரயோக கணிதம்/கணக்கியல் உட்பட குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) வதிவுத் தகைமைகள்.—விண்ணப்பதாரிகள் தெகிவளை கல்கிசை நகராட்சிப் பிரதேசத்தில் 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலவெல்லையில் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருத்தல் வேண்டும். அத்திடிய அஞ்சலுவலகத்திற்கு அண்மையிலுள்ள வட்டாரங்கள் அல்லது அவ்வலுவலகம் அமையும் வட்டாரத்தில் வசிப்பவராகவிருப்பின் முன்னுரிமை அளிக்கப்படும்.

(iii) அலுவலக இடவசதி.—சகலரும் இலகுவில் செல்லத்தக்க முறையில், தற்போதைய அலுவலகத்திற்கு அண்மையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி உப அஞ்சலலுவலகத்திற்கான இடவசதியை வழங்குதல் வேண்டும்.

3. வேதனம்.—ஆகக் குறைந்த திரட்டிய வேதனம் ரூபா 233 ஆகும். இவ்வுப அஞ்சலலுவலகத்தில் நடைபெறும் அலுவல்களைப் பொறுத்து இவ்வேதனம் அதிகரிக்கப்படும். வாழ்க்கைபடி, விசேட வாழ்க்கைப்படி கொடுக்கப்படமாட்டா. இக்கொடுப்பனவுகள் திரட்டிய வேதனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. விண்ணப்பங்கள்.—கொழும்பு 1, எச்சிலன் சதுக்கம், கூறு 5 கொழும்பு தெற்கு பகுதி அஞ்சலுவலகக் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் பெறும் அச்சிட்ட படிவத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து 1975.04.30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கொழும்பு தெற்கு பகுதி அஞ்சலலுவலகக் கண்காணிப்பாளரை அடையும் வண்ணம் அனுப்பப்படல் வேண்டும். மேலும் விபரங்கள் தேவைப்படின் கொழும்பு தெற்கு பகுதி அஞ்சலலுவலகக் கண்காணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ஆர். எம். ஜயவர்த்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைதொடர்புப் பணிப்பாளரும்.

4-6—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்புச் சேவைத் திணைக்களம்

வேலை முகாமையாளர் பதவி

நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்புச் சேவைத் திணைக்களத்தில் வேலை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

2. விண்ணப்பங்கள்.—கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிப்போரின் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் நலன்கவனிப்புச் சேவைத் திணைக்களத்தின் ஆணையாளர், தபாற் பெட்டி 546, கொழும்பு 1 என்ற முகவரிக்கு (ஆணையாளரின் பெயருக்கு அனுப்புதல் கூடாது.) 30.04.1975 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கத்தக்கபடி பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பும் உறையின் இடது மேல் மூலையில் "வேலை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம்" என்று எழுதப்படல் வேண்டும்.

3. சம்பளம்.—இப்பதவிக்கு வழங்கப்படும் சம்பளத்திட்டம் வருமாறு. ஆண்டொன்றுக்கு ரூபா 6,024 இலிருந்து ரூபா 8,040 வரை செல்லும். ரூபா 144 வீதம் 4 ஆண்டுகளும், ரூபா 180 வீதம் 8 ஆண்டுகள் சம்பள உயர்ச்சி வழங்கப்படுகையில், ரூபா 6,780 க்கும் ரூபா 7,500 க்கும் முன் வினைத்திறன் காண் தடையில் நிறுவப்படும்.

4. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்—

(அ) பதவி நிரந்தரமும், இளைப்பாற்றுச் சம்பளமில்லாததும் ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சேமநிதியடிப் படையில் அங்கத்தவராவார்.

குறிப்பு :—31.12.1971 ஆந் திகதிக்கு முன் அரசாங்கத்தின் கீழ் நிரந்தரச் சேவையில் உள்ளவராயிருந்தால், புதிதாக நியமிக்கப்படும் வெற்றிடத்தில் இளைப்பாற்றுச்சம்பளம் தொடர்ந்து அனுபவிக்கப்படும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு அமைவர்.

(இ) அரசாங்க சேவையில் நிரந்தரமும் இளைப்பாற்றுச்சம்பளமுடைய ஊழியர் தேர்ந்தெடுக்கப்பட்டால் குறிக்கப்பட்ட காலத்திற்கு பதில் பதவி வகிப்பதாகக் கருதப்படுவர்.

(ஈ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர், தீவின் எந்தப்பகுதியிலும் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

5. தகைமைகள் :—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(1) இலங்கை வாசியாக இருத்தல் வேண்டும்.

(2) 30.04.1975 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேலெல்லை வயது வரையறை பொருந்தாது.)

(3) சிரேட்ட தாரதரப்பத்திரம் அல்லது க.பொ.த. (சா.த.) பத்திரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம்/எண் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தும் இரண்டு முறைக்குத்தவருத பரீட்சையில் சித்தியடைந்ததாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கீழ்க்காணும் ஏதாவதொரு தகைமை இருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் சான்றிதழ் (பொறிமுறையும் மின்வேலையும்) அல்லது

(ஆ) அம்பாறை காடி தொழில் நுட்பக் கல்லூரியின் தகுதித்தேர்வுப்பத்திரம் (டிப்ளோமா) அல்லது

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் பின்னோ பொறிஎந்திரவியல் சான்றிதழ் அல்லது

(ஈ) தேசிய தகுதித்தேர்வுப்பத்திரம் தொழில் நுட்பம், அல்லது இவற்றுக்குச் சமமான தகைமைகள்.

(4) தகுதியுள்ள நிலையத்தில் 5 வருட தொழில் நுட்ப அநுபவமடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

குறிப்பு :—கட்டிட வேலைகளில் செய்முறை பயிற்சியுள்ளோர்க்கு கூடிய சலுகையுண்டு.

(5) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(6) கல்வி சார்ந்த தகுதியுடையோர், அல்லது சமூக வளர்ச்சியில் ஈடுபட்டுப் பயிற்சியுள்ளோர்க்கும் கூடிய சலுகை உண்டு.

6. விண்ணப்பிப்போர் விண்ணப்பத்துடன் பின்வரும் பிரதிகள் (மூலப்பிரதிகளல்ல) இணைக்கவேண்டும்.

(அ) பிறப்புச்சான்றிதழ் (ஞானஸ்நானப் பத்திரங்களோ அல்லது பாடசாலைகளுக்கான பிரமாணங்களை அனுசரிக்கும் நோக்கமாக வழங்கப்பட்ட சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.)

(ஆ) உயர்தர கல்வித்தராதரச் சான்றிதழ்.

(இ) மேற்கூறப்பட்ட 5 ஆவது பிரிவின் துணைப்பிரிவின் 3 (அ) (ஆ) அல்லது (இ) அல்லது (ஈ) இன் கீழ் பெறப்பெற்ற தகவுத்திறன் சான்றிதழ்.

(ஈ) தொழில்நுட்ப அனுபவ சான்றிதழ்.

(உ) அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப்பத்திரங்கள்.

7. குறித்த திகதிக்குப்பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பிப்போர் அரசாங்க சேவையிலிருந்தும் பகுதி 5 இன்படி தகுதியுள்ளோராயும் இருந்தால், விண்ணப்பம் அவர்களின் பகுதித் தலைவர் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அப்படி அனுப்பப்படும் விண்ணப்பம் குறிக்கப்பட்ட திகதிக்குப்பின் கிடைத்தால், தாமதத்திற்கான தக்க காரணம் காட்டி, அப்பகுதித் தலைவர் விண்ணப்பம் குறித்த திகதிக்குமுன் திணைக்களத்தில் கிடைக்கப்பெற்றது என்று அறிவித்தால் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் I ம் பகுதி (II அ) ம் பிரிவில் காட்டியபடி அரசாங்க சேவையிலிருப்போருக்கான நியதிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

9. இவ்வறிவித்தலின்படி இல்லாத விண்ணப்பங்கள் செல்லுபடியாகாது. விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டதா என்ற பதில் அனுப்பப் படமாட்டாது.

என். கே. ஏ. த சில்வா,
நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்புச் சேவைத் திணைக்களத்தின் ஆணையாளர்.

நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன்
கவனிப்புச் சேவைத் திணைக்களம்,
தபால் பெட்டி 546,
கொழும்பு,
19.03.1975.

குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவம்

வேலை. முகாமையாளர் பதவி—நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் சேவைத் திணைக்களம்

1. முழுப் பெயர் :————.

2. நிரந்தரமான தபால் முகவரி :————.

3. பிறந்த திகதியும் வயதும் :————.
(பிறப்புச் சாட்சிப்பத்திரத்தின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.)

4. விவாகம் செய்தவரா ? தனியாளா ? :————.

5. கல்வித் தகைமைகள் :————.
(தகைமைப்பத்திரத்தின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

6. தொழில்நுட்பத் தகைமைகள் :————.
(தகைமைப்பத்திரத்தின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

7. வாலியர் நலன்புரி சேவையில் அல்லது சமூக சேவையில் ஈடுபட்டிருந்தால் அதன் விபரங்கள் :————.

8. விசேஷ தகைமைகள் :————.
(பெற்றுக்கொண்ட பயிற்சிகள், தகைமைகள், அநுபவங்கள்)

9. பாடசாலை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழில் :————.
(தொழில் கொடுத்தோரின் பெயர், தொழிலின் தன்மை, தொழில் செய்த காலம், இவை குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பகாரர் அரசாங்க வேலையிலிருந்தால் சேவை விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.)

10. தற்போது வேலையிலிருந்தால் அதன் குறிப்புகள் :————.

11. அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது பொதுத்துறையைச் சேர்ந்த கூட்டுத்தாபனத்தில் அல்லது வங்கியில் (மத்திய வங்கி, சர்வகலாசாலை, அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கூட்டுப் பங்கு கம்பனிகள், கம்பனிகள்) சேவையில் அமர்த்தப்பட்டிருந்தால் சேவை நிறுத்தப்பட்டதற்கான காரணங்களைத் தருக :————.

12. இணைக்கப்பட்டுள்ள நற்சாட்சிப்பத்திரம் கொடுத்த மூன்று பேரின் பெயர்கள் :—

(1) ————.
(2) ————.
(3) ————.

விண்ணப்பப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட விபரங்கள் சரியானவையென்றும், உண்மையானவையென்றும், இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

4-22—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

**பெ. இ. அ. பூநகரியில் பல்லவராயன்கட்டு கிராமசபைப் பகுதிக்கான சடுதி மரண விசாரணையாளர் பதவி**

யாழ் மாவட்ட மேற்படி பிரிவில் திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கு கீழ்வரும் தகைமை உடையோர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கீழே தரப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 1975.4.30 ந் திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

"அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம்"

2. பின்வரும் தகைமைகள் உள்ளமைக்கு போதிய அத்தாட்சி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 30 வருடங்களுக்குக் குறையாமலும் 55 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல்.

(ஆ) மேற்கூறிய பகுதியில் நிரந்தரப் பதிவாளராய் இருத்தல்.

(இ) சிறந்த சரிதையுடையவராய் இருத்தல்.

(ஈ) தமிழ் பாஷையுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண) தரப் பத்திரப் பரீட்சையில் இரு தடவைக்கு கூடாத தடவைகளில் சிங்களம்/தமிழ் உடன் எண்கணிதம்/ஆரம்ப கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டும்.

(உ) மாதாந்த வருமானம் ரூபா 200 அல்லது அதற்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :—

1. பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

2. கல்வித் தகைமைக்கான அத்தாட்சிப் பத்திரங்கள்.

3. அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்கள் இரண்டு, அவற்றுள் ஒன்று பகுதி கிராமச் சேவகருடையதாக இருத்தல் வேண்டும்.

4. அரசாங்க கூட்டுத்தாபன, உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களினதும் உள்ளூராட்சிச் சபைப் பிரதிகளினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எம். டபிள்யூ. அமரசேகர,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

உ. அ. அ. (2)
1975.3.19,
யாழ் மாவட்ட அரசாங்கச் செயலகம்.

விண்ணப்பப் படிவம்

யாழ் மாவட்ட————பிரிவில் திடீர் மரண விசாரணையாளர்

1. முழுப் பெயரும் விலாசமும் :————.
2. வசிக்கும் இடம் :————.
3. வயதும் பிறந்த திகதியும் :————.
4. விவாகமானவரா அல்லது விவாகமாகதவரா ? :————.
5. கல்வித் தகைமை :————.
6. தற்போது வகிக்கும் பதவி அல்லது முன்பு வகித்த பதவிகள் :————.
7. மாதாந்த வருமானம் :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

4-3—04.04.75. ந் திகதிய வர்த்தமானி இல. 158

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

கனிஷ்ட தொழில் நுட்ப நிறுவனம்—சம்மாந்துறை

கழகவாண்டு—1975

சம்மாந்துறை கனிஷ்ட தொழில் நுட்ப நிறுவனத்தில் 1975 ம் கழக ஆண்டில் நடைபெறும் பயிற்சி நெறிகளுக்கு தகுதியுடைய அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபபடும். விண்ணப்பங்கள் 1975.04.30 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, சம்மாந்துறை கனிஷ்ட தொழில் நுடப நிறுவன அதிபருக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பபபடல் வேண்டும். பகல் முழுநேர (தமிழ் மொழி மூலம்) மாலை நேர (தமிழ் மொழி மூலம்) தொழில் கற்கைகளிலான தேசியச் சான்றிதழ் பயிற்சி நெறிக்கே (கணக்கியல், நிருவாகப் பயிறசி, சுருக்கெழுத்து, தட்டச்சு) விண்ணப்பஙகள் கோரப் படுகின்றன.

காலை வகுப்புக்கள் : மு. ப. 8.30 மணி—பி. ப. 4.30 மணி வரை

மாலை வகுப்புக்கள் : பி. ப. 5.00 மணி—பி. ப. 8.00 மணி வரை

காலை வகுப்பிற்குரியவர்கள் பூரணப்படுத்தப்பட்ட தமது விண்ணப்பங்களை நேரடியாகவும், மாலை நேர வகுப்பிற்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணபபங்களை தத்தம் திணைக்களத் தலைவர் மூலமாகவும் அனுப்புதல் வேண்டும்.

2. தகவுத்திறன்

அபேட்சகர்கள்—

(1) கணிதம்/எண்கணிதம்/வாணிக எண்கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சா. த) பரீடசையில் இரு தடவைகளுககு மேற்படாது தோற்றி சித்தியடைந்திருக்க வேண்டும்.

(2) 1.1.1975 அன்று 17 வயதிற்கு குறைந்தவர்களாக இருத்தலாகாது.

(3) அரசாங்கத்திலோ அல்லது கூட்டுத்தாபனத்திலோ அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலோ சேவை செய்பவர்களுக்கு இப்பயிற்சி நெறி பயனுடையதாயிருக்க வேண்டும்.

3. ஆட்சேர்ப்பு.—பிரவேசப் பரீட்சை அல்லது வாய்மூலப் பரீட்சை அல்லது இவ்விருவகைப் பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்டு அபேட்சகர்கள் தெரிவு செயயப்படுவார்கள்.

4. விண்ணப்பப் படிவம்.—கீழ் குறிப்பிடப்படும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பம் பூரணப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். உரிய முறையில பூரணப்படுத்தப்படாத் அல்லது விதிக்கப்பட்ட திகதிக்கு பெற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. (1) மாலை நேர வகுப்பிற் சேரும் மாணவர்கள் மாதமொன்றிற்கு (10/–) பத்து ரூபா கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) பகல் நேர வகுப்பில் சேரும் மாணவர்கள் மாதாந்தக் கட்டணம் செலுத்தத் தேவை இல்லை.

டீ. அமரசிங்க,
பதில் வித்தியாதிபதி,
(தொழில் நுட்பக்கல்வி)
மாவித்தியாதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
கொழும்பு 2,
1975 ம் ஆண்டு மார்ச் மீ 24 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

பயிற்சி நெறிகள் :

*(1) தொழில் கற்கைகளிலான தேசியச் சான்றிதழ் பயிற்சி நெறிகள் (கணக்கியல், நிருவாகப் பயிற்சி, சுருக்கெழுத்து) பகல் நேரம்—(தமிழ் மொழி மூலம்)

*(2) தொழில் கற்கைகளிலான தேசியச் சான்றிதழ்ப் பயிற்சிநெறி (கணக்கியல்) மாலை நேரம்—(தமிழ் மொழி மூலம்)

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) :————.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் : ————.
3. பிறந்த திகதி : ————வருடம் : ————மாதம் : ————நாள். (பிறப்புச்சாட்சிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. தொழில் புரியும் இடத்தின் முகவரி :————.
5. பிரத்தியேக முகவரி : ————.
6. ஆணு/பெண்ணு : ————.
7. தற்போது புரியும் தொழில் : ————.
   அதன் நியமனத் திகதி : ————.
8. கல்வித் தராதரங்கள் : (சித்தியெய்திய பரீட்சைகளின் வருடம், மாதம், பரீட்சை எண், சித்தியெய்திய பரீட்சை, பாடங்கள், ஆகியன கொடுபடல் வேண்டும்.)

   சித்தியெய்திய பரீட்சைகளின் வருடமும் மாதமும்.————.
   பரீட்சை எண் : ————.

சித்தியெய்திய பரீட்சை : ————.

பாடங்கள்—

1. ———— ————
2. ———— ————
3. ———— ————
4. ———— ————
5. ———— ————
6. ———— ————
7. ———— ————
8. ———— ————

மேற்கூறப்பட்ட யாவும் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

————
திகதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தொழில் தருநரின் உறுதியுரை

............................ ஆல் கூறப்பட்ட விபரங்கள் எனது அலுவலகத்திலுள்ள தஸ்தாவேஜுகளின்படி சரியெனவும், இப்பயிற்சி நெறியில் பயில்வதற்கு அவருடைய தொழில் பொருத்த முடையது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
திகதி : ———— தொழில் தருநரின் கையொப்பம்.

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

4–73—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

### ஆசுபத்திரி எழுதுநர் சேவை வகுப்பு II பிரிவு "அ" விலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறைமகாண் தடைப்பரீட்சை—1974

ஆசுபத்திரி எழுதுநர் சேவை வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள பின்வரும் பரீட்சார்த்திகள், ஆசுபத்திரி எழுதுநர் சேவை மீதான நிகழ்ச்சிக் குறிப்பின் 15 ஆம் பத்தியில் குறிப்பிட பட்டதும், 25.8.1974 ஆந் திகதியன்று நடைபெற்றதுமான பரீட்சார்த்திகள், ஆசுபத்திரி எழுதுநர் சேவை மீதான நிகழ்ச்சிக் குறிப்பின் 15 ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டதும், 25.8.1974 ஆந் திகதியன்று நடைபெற்றதுமான பரீட்சையில் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ளார்களென்று இத்தால் பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது..

| | பெயர் | கடமைபுரியும் இடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | அபயரத்ன பண்டா, ஏ. ஆர். | ஆதார ஆசுப்பத்திரி, கேகாலை | கணக்கு |
| 2. | மண்டவல, ஜே. | மார்புநோய்ப் பிணியாய் நிலையம், கண்டி | கணக்கு |
| 3. | நாமசேன, யு. டி. | சு. சே. க. அலுவலகம், கேகாலை | கணக்கு |
| 4. | ஷமூர் நாயகம், எஸ். | கொழும்பு தெற்கு ஆசுப்பத்திரி, களுபோவில | அலுவலக ஒழுங்கு முறைகளும் நடைமுறையும் |
| 5. | பிரேமரத்ன, எச். பி. | கயரோகத் தடை இயக்க அலுவலகம், கொழும்பு | அலுவலக ஒழுங்கு முறைகளும் நடைமுறையும் |
| 6. | அகமட், ரி. ஏ. பி. | லேடி றிஜ்வே சிறுவர் ஆசுபத்திரி, கொழும்பு | கணக்கு |
| 7. | மீகஸ்தெனிய, எம். பி. | மார்பு நோய்ப் பிணியாய் நிலையம், கண்டி | கணக்கு |

பி. ஜீ. ஜீ. தர்மசிறி,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
சுகாதாரசேவைப் பணிப்பாளருக்காக.

சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம்,
கொழும்பு, 1975 மார்ச் 24 ஆந் திகதி.

4–79 - 04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

### அம்பாறை ஹாடி சிரேட்ட தொழிநுட்ப நிலையத்தில் நடைபெறும் விவசாயத்திலான மூன்று வருட தேசிய தொழில் நுட்பவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்—கழகவாண்டு, 1975.

அம்பாறை ஹாடி சிரேட்ட தொழிநுட்ப நிலையத்தில் நடைபெறும் விவசாயத்திலான மூன்று வருட முழுநேர தேசிய தொழில் நுட்ப வியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு (இரண்டு வருடங்கள் நிலையத்திலான கழகப் பயிற்சியும் மூன்றும் வருடம் விவசாய தாபனங்களில் இணைக்கப்பட்டு பொறிமுறைப் பயிற்சியும்) மாணவர்களைச் சேர்த்தற் பொருட்டு தகுதிபெற்ற ஆண் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகவுத்திறன் :**

(அ) வயது—அபேட்சகர்கள் 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதியன்று 16 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்க வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.—அபேட்சகர்கள் தூயகணிதம், இரசாயனவியல், ஒரு மொழி ஆகியவை உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையில் ஒரே தோற்றத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் பின்வரும் தொகுதிப் பாடங்களில் குறைந்த பட்சம் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் அதே தோற்றத்தில் திறமைச்சித்திகள் பெற்றிருக்க வேண்டும் :—

(1) தூயகணிதம்
(2) பௌதிகவியல்
(3) இரசாயனவியல்
(4) உயிரியல்
(5) விவசாயம்
(6) புவியியல்

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டும். சகல விண்ணப்பங்களும் அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையப் பதிவாளருக்கு 75.04.30 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

மேலே 2 (ஆ) ஆம் பந்தியில் கீழ் கொடுபட்டுள்ள தொகுதிப் பாடங்களிலும் நேர்முகப் பரீட்சையிலும் விண்ணப்பதாரிகள் பெறும் தேர்ச்சி அடிப்படையில் மாணவர்களின் தெரிவு நடைபெறும்.

விவசாயத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் விசேடமாக விரும்பப்படுவர்.

டீ. அமரசிங்க,
பதிற் கல்விப் பணிப்பாளர்,
(தொழில்நுட்பக் கல்வி),
கல்வி மா அதிபருக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1975.03.24.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

அம்பாறை ஹாடி சிரேட்ட தொழிநுட்ப நிலையத்தில் நடைபெறும் விவசாயத்திலான மூன்று வருட தேசிய தொழில் நுட்பவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு மாணவர்களை 1975 ஆம் கழக வாண்டிற் சேர்த்தற்கு அனுமதிகோரும் விண்ணப்பம்.

1. முழுப் பெயர் (தெளிவாக எழுதவும்) :———.

2. அஞ்சல் முகவரி :———.

3. பிறந்த திகதி :———.
(விண்ணப்பதாரியின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி —மூலப்படியல்ல இணைக்கப்பட வேண்டும்)

4. 01.01.1975 அன்றுள்ளபடி வயது :—
வருடம் ——— மாதம் ——— நாள் ———

5. நாட்டினம் :———.

6. (அ) அறிவித்தலின் 2 (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளைப் பெற்ற க. பொ. த. ப. (சாதாரண தர) ப் பரீட்சை வருடம், மாதம், சுட்டிலக்கம் :———.
வருடம் ——— மாதம் ——— சுட்டிலக்கம் ———.

(ஆ) சித்தி எய்திய பாடங்களும் பெற்ற தேர்ச்சியும் :———.
(சாதாரண சித்தி, திறமைச் சித்தி, விசேட சித்தி ஆகியன)
பாடங்கள். தேர்ச்சி.

7. பெற்றோரின்/பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :———.

———,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :———.

4-74—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

கமத்தொழில் திணைக்களத்துக்கு ஆய்வுகூட உதவியாளர் சேர்ப்பதற்கான பரீட்சை

கமத்தொழில் திணைக்களத்தின் ஆய்வுகூட உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை 1975 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி கொழும்பில் நடாத்தப்படும். இப்பதவிகளுக்கு ஆண்கள் மட்டும் போட்டியிடலாம். இப்பதவிகளுக்குத் தேவையான தகைமைகள், சேவை நிபந்தனைகள் ஆகியவற்றை இதன் கீழ்க் காணுக.

**1. இப்பதவிகளுக்கான சம்பள அளவுத் திட்டம் (திரட்டுச் சம்பளம்).—**

(அ) ஆண்டொன்றுக்கு தரம் I—ரூபா 5,304—8 × 144—6,456.

(ஆ) ஆண்டொன்றுக்கு தரம் II—ரூபா 3,144—15 × 144—5,304. வி. தி. கா. த. ரூபா 3,720 க்கும் ரூபா 4,584 க்கும் முன்னர்.

(இ) ஆண்டொன்றுக்கு தரம் III—ரூபா 2,760—4 × 60, 17 × 90—4,530. வி. தி. கா. த. ரூபா 3,360 க்கும் ரூபா 3,720 க்கும் முன்னர்.

**குறிப்பு.**—எப்பொழுதாயினும் தரம் II ல் உள்ள பதவிகளின் எண்ணிக்கையில் ஆறிலொன்றுக்கு மேற்பட தரம் I ன் பதவிகளின் எண்ணிக்கை அமையாது. தரம் I க்கான நியமனங்கள் தரம் II ல் உள்ள உத்தியோகத்தர்களிடையே முதுமுறை, சிறப்புத் திறமை ஆகியவற்றுக்கமைவாகத் தெரிவு செய்தலால் அமையும். தரம் III க்குரிய நியமனங்கள் ஆய்வுகூட உப துணைவர்த் தரத்திலிருந்து செய்யப்படும்.

**2. சேவை நிபந்தனைகள்.**

(1) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஈராண்டு காலத்துக்கு ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்ற வேண்டியவராவர். முதலாண்டுப் பயிற்சி விவசாய விஞ்ஞானக் கொள்கை, கால்நடை வளர்ப்பும் மிருக வைத்தியமும், விவசாய இரசாயனம், விவசாயத் தாவரவியல், பூச்சியியல், தாவரநோயியல் ஆகியவற்றுள் தெரிவு செய்யப்படும் ஒரு பிரிவிலே விரிவுரை, செய்முறை ஆகியவற்றினால் எல்லைப்படுத்தப்படும். முதலாண்டு முடிவிலே ஒரு பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையிற் சித்திபெறத் தவறும் அபேட்சகர்கள் நிறுத்தப்படவேண்டியவராயினும் எல்லாமாக மூன்று எத்தனிப்புக்கள் முடியும் வரை மேலும் வாய்ப்பு அளிக்கப்படுவர். இரண்டாண்டு கமத்தொழில் திணைக்களத்தின் தாவரவியல், விவசாய இரசாயனம், தாவரநோயியல், பூச்சியியல், மிருக வைத்தியம் ஆகிய ஆராய்ச்சிப் பிரிவுகளுள் ஒன்றன் தலைவருக்குக் கீழ் செய்முறை பயிலற்குரிய காலமாகும். ஈராண்டுக்கு மேற்படாத காலத்தில் உட்டுறைப் பயிற்சிக் காலத்தில் வேலையும் நடத்தையும் அதிருப்தி நிலையிற் காணப்படும் அபேட்சகர்கள் விடயம் கமத்தொழிற் பணிப்பாளரின் தீர்மானத்திற்குரியது. ஈராண்டுப் பயிற்சி நெறியை வெற்றியாக நிறைவேற்றும் அபேட்சகர்கள் மூன்று ஆண்டுத் தகுதிகாண் நிலையில் தரம் II ஆய்வுகூட உதவியாளராக நியமனம் பெறுவர்.

(2) (அ) பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பளம் அற்றவையுமாகும். பொது சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகை வழங்குதல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்படுபவர் உபகாரச் சம்பளமும் நிரந்தரமும் உடைய பதவியை 31.12.1971 க்கு முன்பிருந்தே வகிப்பவராயின் தொடர்ந்து உபகாரச் சம்பள உரிமைகளுக்கு உரித்துடையவர் ஆவார்.

(இ) அரச சேவையில் நிரந்தரமான பதவி வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் குறித்த காலத்திற்குப் பதிற் கடமையாற்ற நியமிக்கப்படுவர்.

(3) முதலாண்டு முடிவில் நடாத்தப்படும் பரீட்சையின் முடிவுகளுக்கமைவாக அபேட்சகர்களின் முதுமுறை தீர்மானிக்கப்படும். உட்டுறைப் பயிற்சிக் காலம் நீடிக்கப்படும் அபேட்சகர்கள் ஏனையோரிலும் கனிட்டராவர்.

(4) பயிற்சிக் காலத்தில் ஆண்டொன்றுக்கு ரூபா 2,856 படியாக வழங்கப்படும். நீடிப்புக் காலத்தில் எவ்விதமான படியும் கொடுபடமாட்டாது.

(5) பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் பயிற்சி வகுப்பில் சேரும் தேதியிலிருந்து ஏழு ஆண்டு காலத்திற்குக் கமத்தொழில் திணைக்களத்திற் சேவை செய்யவும் தவறும் போது பயிற்சிக் காலத்தில் அவர்கள் பெற்றுள்ள எல்லாச் சம்பளங்களையும் படிகளையும் மீளளிக்கவும் பிணைநிற்போருடன் சேர்ந்து ஒரு உடன்படிக்கையிலும் முறியிலும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

(6) ஆய்வுகூட துணை உதவியாளர் தரத்திலும் ஆய்வுகூட உதவியாளர் தரத்திலுமிருந்து சேர்க்கப்படும் அபேட்சகர்கள் பயிற்சிக் காலத்தில் பதில் நிலைமையில் நியமிக்கப்பட்டு மேலே பந்தி (2) (1) இல் சொல்லப்பட்ட பரீட்சையிற் சித்தி பெறும்போது பதவிகளில் உறுதிப்படுத்தப்படுவர். இந்தப் பரீட்சையிற் சித்திபெறத் தவறுவோர் அவர்களின் நிலையான பதவிக்கு மாற்றப்படுவர்.

(7) ஆய்வுகூட உதவியாளர் வாரத்தில் ஏழு நாட்களும் வேலை செய்பவர். எனவே, அவர்கள் அரசாங்க விடுமுறைகளும் நோன்மதி நாட்களும் உட்பட வாரத்தில் ஏழு நாட்களும் அரசினர் வேலை செய்ய வேண்டியவராவர். வாரத்தில் எந் நாளிலும் பகல் அல்லது இரவு முழுமையும் வேலை செய்ய அழைக்கப்படின் அவர்கள் வேலைக்கு வரத் தயாராயிருத்தல் வேண்டும். இத் தீவின் எப்பகுதியிலும் அவர்கள் சேவை புரிய சித்தமாயிருத்தல் வேண்டும்.

(8) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கும், அரசின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்த இப்போது நடைமுறையிலிருக்கும் அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(9) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள், அவர்களின் தகுதிகாண்/பதிற் கடமையாற்று நிலைக் காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும். அவர்களின் தகுதிகாண்/பதிற் கடமையாற்று நிலை முடிவடையும்போது பதவிகளில் உறுதிப் படுத்தப்படுதல் பிறவற்றுடன் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுதலையும் பொறுத்ததாகும்.

(10) தகுதிகாண்/பதிற் கடமையாற்று நிலைக் காலத்தில் விதிக்கப்படும் சிங்கள மொழித் தேர்ச்சியைப் பெறத் தவறும் அபேட்சகர்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட நேரலாம்.

(11) சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையிற் சேரத் தகைமை பெறும் உத்தியோகத்தர் சிங்கள மொழிச் சோதனையிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—(அ) ஆய்வுகூட உதவியாளர் நியமனங்களிற் சேருங்காலத்தில் " முன் சேர்ந்தவர் " எனக் கருதப்படும் அபேட்சகர்கள் மேலே துணைப் பந்திகள் (9), (10) இல் காணப்படும் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப் படுவர்.

(ஆ) தரம் III இல் 24.9.56 க்கு முன்னர் நிலையான நியமனங்கள் பெற்றுள்ள ஆய்வுகூடத் துணை உதவியாளரும் ஆய்வுகூட உதவியாளரும் தரம் II இல் ஆய்வுகூட உதவியாளர் நியமனத்திற்குத் தெரிவு செய்யப்படின் அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்துக்கு அவர்கள் " முன் சேர்ந்தவர்கள் " எனக் கருதப்படுவர்.

3. தேவையான தகைமைகள்

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் திருப்தியான நிறுவல் சமர்ப்பிக்க வேண்டியன :—

(அ) வயதில் 1975.05.31 இல் 17 க்குக் குறையாமையும் 25 க்கு மேற்படாமையும் (கீழ்ச் சொல்லப்படும் பந்திகள் (ஆ) (2) (4) ல் சொல்லப்படும் அபேட்சகர்கள் விடயத்தில் இந்த உச்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது ;

(ஆ) (1) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியும் எந்தவொரு அமர்விலும் பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றுள் ஒன்றிலே திறமைச் சித்தியும் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் தேறலும் ; அல்லது

(2) (அ) சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, (ஆ) கணிதம், எண் கணிதம் அல்லது வர்த்தக கணிதம், (இ) இரசாயனம் (திறமைச் சித்தி) ஆகியவையும், (ஈ) பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றுள் ஒன்றிலே திறமைச் சித்தியும் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையிற் சித்தி ;

குறிப்பு.—இரு அமர்வுகளுக்கு மேற்படாத முறையில் (அ), (ஆ) உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையிற் சித்தி பெற்றிருப்பின (இ), (ஈ) வெவ்வேறான அமர்வுகளிற் பெற்றிருப்பினும் அது போதுமானதாகும் , அல்லது

(3) கமத்தொழில் திணைக்களத்திலுள்ள, சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையிற் சித்தியடைந்து 3 ஆண்டுச் சேவைக் காலத்தைச் செவ்வனே கழித்த, III ஆம் தர ஆய்வுகூட உதவியாளர் அல்லது ஆய்வுகூட துணை உதவியாளர் அல்லது,

(4) கமத்தொழில் திணைக்களத்திலுள்ள, கனிட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையிற் சித்தியுடன் 5 ஆண்டு சேவைக் காலத்தைச் செவ்வனே நிறைவேற்றிய, III ம் தர ஆய்வுகூட உதவியாளர் அல்லது ஆய்வுகூடத் துணை உதவியாளர்.

4. பரீட்சை மொழி

இப்பரீட்சைக்குப் புகுதலுக்குத் தகைமையளிக்கும் பரீட்சை எழுதிய மொழியிலேயே (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) இப்பரீட்சை எழுதப்படுதல் வேண்டும் :—

(அ) மேலே பந்தி 4 இல் விதிக்கப்பட்டுள்ள தகைமைப் பரீட்சைச் சித்தியைப் பொருட்படுத்தாது இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படும். இத்திணைக்களத்தில் வேலை செய்யும் அபேட்சகர்கள் அவர்கள் கல்வி கற்ற மொழியிலேயே இப்பரீட்சை எழுதுதல் வேண்டும்.

(இ) தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி மூலம் கல்வித் தகைமைகள் பெற்றுள்ளோரும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றோரும் இப்பரீட்சையைச் சிங்கள மொழியில் எடுத்துக் கொள்ளலாம்.

5. எழுத்து மூலமான பரீட்சையில் திருப்தியான தராதரத்தை அடையும் பரீட்சார்த்திகள் வாய்மொழிப் பரீட்சைக்கு வருகை தருவதற்கு தெரிவு செய்யப்பட்டு, தேதி, நேரம், இடம் காலக்கிரமத்தில் தனித்தனி அறிவிக்கப்படுவர். கமத்தொழிற் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் சபையினரால் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும். இது சம்பந்தமாகப் பிரயாணச் செலவோ பிற செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பாகம் : (II அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றையும் பார்க்குக.

7. (1) இப்பரீட்சைக்குப் பிரவேசித்தற்குரிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் அடிப்பகுதியில் தரப்பட்டுள்ளது. நீளப்பாட்டு அரைத் தாளில் விண்ணப்பப் படிவத்திற் கேட்கப்படும் விபரங்களை நிரப்பி அனுப்பலாம். விண்ணப்பத்தின் 8 ஆம் பந்தி தாளின் பின்பக்கத்தில் அமைதல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் " கமத்தொழில் பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி), கமத்தொழில் ஆராய்ச்சி மத்திய தாபனம், கன்னொறுவ, பேராதனை " என்னும் முகவரிக்கு 1975.04.15 ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வந்து சேருதல் வேண்டும்.

உரிய தேதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பமுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சைப் பெயர் விளக்கமாக எழுதப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ரூபா 40 பெறுமதியுள்ளதும் முறைப்படி அழிக்கப்பட்டதுமான முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கான முத்திரைச் செலவு ரூபா 20 ஆகும்.

(5) ஏற்கனவே அரசாங்க திணைக்களத்தில் அலுவல் பார்க்கும் பரீட்சார்த்திகள், அவர்கள் கடமையாற்றும் அரசாங்கத் திணைக்களத் தலைவர்களினூடாகவே அவர்களின் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். 1975.04.15 ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கமத்தொழிற் பிரதிப் பணிப்பாளரிடம் (ஆராய்ச்சி) சேரும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் செய்து பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(6) திணைக்களத் தலைவர்களுக்கூடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படும் பொழுது அவர்கள், விண்ணப்பதாரி பதவிக்குத் தெரிவு செய்யப்படில், தற்பொழுது வகிக்கும் பதவியிலிருந்து அவர் விடுதலை செய்யப்படுவாரா எனக் குறிக்க வேண்டும். கமத்தொழிற் பணிப்பாளரினதோ வேறெந்த உத்தியோகத்தரினதோ சொந்தப் பெயர் உள்ள முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படுதலாகாது.

(7) விண்ணப்பகாரரின் கையொப்பம் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்டவர்கள் சமாதான நீதிவான், சத்திய ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, அரசினர் அல்லது பணியாளரின் முகாமைப் பாடசாலையொன்றின் அதிபர்; கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றின் ஆணை பெற்ற உத்தியோகத்தர், ஆண்டொன்றுக்கு 4,800 ரூபாவோ மேலோ சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், விகாராதிபதி அல்லது பௌத்த கோயிலின் உயர் குரு, அல்லது வணக்கத்துக்குரிய தலமொன்றினது பொறுப்பாளராகவிருக்கும் அன்றேல் முக்கியத்துவமான பதவியொன்றை வகித்து வரும் பிற சமயக் குரு.

8. பரீட்சை அனுமதி

(1) கமத்தொழிற் பணிப்பாளர் தாம் ஏற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சையை மேற்பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்திற் சமூகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

இப்பரீட்சைக்குரிய நேரசூசி இதனகத்து அச்சிடப்படுகின்றது. பரீட்சார்த்திகளுக்குப் புறம்பான நேரசூசி பிரதி அனுப்பப்படமாட்டாது.

இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளுக்குரிய விதிகள் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவார்.

பரீட்சைத் தேதிக்கு நேரகாலத்தில் (குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர்) அனுமதிப் பத்திரம் பெறாத பரீட்சார்த்திகள், விவசாய ஆராய்ச்சி மத்திய தாபனம், கன்னொறுவ,

பேராதனை என்னும் முகவரியிலுள்ள கமத்தொழில் (ஆராய்ச்சி) பிரதிப் பணிப்பாளருடன் (தந்தி விலாசம் : அக்கிறிசேச்சு, கன்னொறுவ, பேராதனை) உடனடியாகத் தொடர்பு கொண்டு அனுமதிப்பத்திரத்தைத் தான் இதுகாறும் பெறவில்லையென அறிவித்துக் கீழ்வரும் தகவலையும் கொடுத்தல் வேண்டும் :—

(அ) பரீட்சையின் பெயர் :————.

(ஆ) முழுப்பெயர் :————.

(இ) முழுத் தபால் முகவரி :————.

(ஈ) பரீட்சை நிலையம் :————.

(உ) தபாற் கந்தோர், பதிவு இலக்கம், விண்ணப்பம் அனுப்பிய திகதி :————.

(2) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதைத் தகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதக் கூடாது.

கமத்தொழிற் பணிப்பாளர் தமது உசிதப்படி பரீட்சார்த்தி யொருவருக்கு இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சை யெடுத்தமை பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

9. அடையாளச் சீட்டுகள்

பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வோர் பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்துக் காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப் படும் :—

(அ) தபாற் கந்தோர் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு.

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன்னர் 3 ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு.

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன்னர் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்கத் திணைக்களத்தின், கூட்டுத்தாபனத்தின், நியதிச்சட்ட முறையான சபையின் அல்லது அதிகாரியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்பட மொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம், உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்.

(ஈ) கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தற்குத் தகைமை வாய்ந்த வொருவரினால் படத்தின் பின்புறத்தில் எழுதப்படும் பின் வருமாறுன சான்று பகர்வு உள்ள, கடவுச்சீட்டுக்குரிய பருப்ப ஒளிப்படம் :

" இதன் கீழ் கையொப்பமிட்டுள்ள ....................
(அபேட்சகரின் முழுப்பெயர்
...................... அவர்களின் ஒளிப்படமே மறு பக்கத்தில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றேன் ".

..........................................
அபேட்சகரின் கையொப்பத்துக்குச் சான்று பகருபவரின் கையொப்பம்.

..........................................
பெயர்; பதவிப் பெயர், திகதி

..........................................
விண்ணப்பகாரரின் வழமையான கையொப்பம்

சொல்லப்பட்ட சாதனங்களுள் ஒன்றினையேனும் காட்ட இயலாத விண்ணப்பகாரரின் அபேட்சகர் நிலை தற்போதையதாகும். அவ்வித நிலை கமத்தொழிற் பணிப்பாளரின் தற்றுணிபின்படி அழிக்கப்படலாம்.

10. தகுதிச் சாதனங்கள்

(அ) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்ப லாகாது. ஆனால் பத்திரத்திலேயே கேட்கப்பட்டவாறு தேவை யான விபரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த வகைகளிலெல்லாம் நிறைவு பெற்றிராத ஒரு விண்ணப் பம் அதன் தகுதிக்கேற்பச் சீர்தூக்கி ஆராயப்பட்டு நிராகரிக்கப் படினும் படலாம்.

(ஆ) தகைமை பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து அவர்கள் தங்கள் தகுதியுடைமையை நிறுவுவதற்காகச் சாதனச் சான்று வேண் டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள், வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்பட்டால், இச்சாதனங்களைக் காட்டுதல் வேண்டும் அல்லது கமத்தொழிற் பணிப்பாளர் கேட்கும்போது தாமத மின்றி அவற்றைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(1) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்டுள்ள ஒரு நற்சான்றுப் பத்திரம்.

குறிப்பு.—பரீட்சார்த்தி ஓர் அரசாங்க பாடசாலையில் உதவி பெறும் பாடசாலையில் மாணவராயிருப்பின் அல்லது அண்மையில் விலகியிருப்பின் அப் பாடசாலை அதிபரிடமிருந்தே நற்சான்றுப் பத்திரம் பெறுதல் வேண்டும். அல்லாவிடின் ஒரு சமாதான நீதவானிடம், வழக்கறிஞரிடம், நியாய துரந்தரிடம் இருந்தோ அல்லது நொத்தாரிசிடமிருந்தோ அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர், ஆண்டொன்றுக்கு 2,400 ரூபாயோ அதற்கு மேலோ சம்பளமாகப் பெறும் ஒரு நிலையான அரசாங்க உத்தியோகத்தரிடம் இருந்தோ அல்லது பொதுவாகக் கூறு மிடத்து பிரசித்தி பெற்றவரும் சாதாரணமாக அறியப்பட்டவருமான ஒருவரிடம் இருந்தோ பெற்றுக் கொள்ளலாம். நற்சான்றுப் பத்திரம் அதனை வழங்குபவரின் பெயர், பதவி, விலாசம் முதலியனவற்றைத் தெளிவாகக் கொண்டுள்ளதாயிருத்தல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் பரீட் சார்த்திகள் நற்சான்றுப் பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப்படமாட்டார்.

(2) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப் பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப் பதிவு செய்யப்படாத பரீட்சார்த்தியின் பொருட்டு) பதிவாளர் நாயகத்தினால் கொடுக் கப்பட்ட விசேட வயது சாட்சிப் பத்திரம். எந்தவோர் அபேட் சகரும் நேர்தகவுச் சான்றிதழ் மட்டும் சமர்ப்பிக்குமிடத்து அன்னவரின் சான்றிதழிற் காட்டப்பட்டுள்ள ஆண்டின் யூலை 1 ஆந் தேதியே அவரின் பிறப்புத் தேதியெனக் கருதப்படும்.

குறிப்பு.—(அ) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவை களுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்பத்தாட்சிப் பத்திரம் அல்லது பிறப்புப் பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத் தாட்சிப் படுத்தப்பட்ட பகுதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) சத்தியக் கடதாசியோ, ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரங்களோ பிறப்பத்தாட்சிப் பத்திரங்களுக்குப் பதி லாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(இ) பிறப்பத்தாட்சிப் பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும்/உபயோகிப் பனவும் இப்பரீட்சையெடுப்பதற்குக் கொடுத்துள்ளதும்/ கொடுத்துள்ளனவுமான பெயர்/பெயர்களினின்றும், வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திரு த்துவதற்கு 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின்படி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) நிரந்தர அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு 18.8.57 இன் 394 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர் களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவு இடாப்பிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்படமாட்டார்கள்.

(3) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவத்தாட்சிப் பத்திரம் அல்லது (ஏற்புடையவிடத்து) பரம் பரைப் பிரசையென்றும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் உத்தியோகபூர்வமான மூலக் கடிதம்.

(4) கல்வித் தகைமைகள் பற்றிய மூலச் சான்றிதழ்கள் அல்லது அவ்வித சான்றிதழ்கள் இன்னும் பெற்றுக்கொள்ளப் படாவிடத்து, தொடர்பான அரசகரும வேறேதேனும் சாதனம் (உ—ம் : தனிப்பட்ட அபேட்சகர்களுக்கு வழங்கப்படும் கல்விப் பொதுத் தராதர (சாதாரண)ப் பரீட்சையின் முடிவுத்தாள் அல்லது அபேட்சகரின் பாடசாலை அதிபரின் கடிதம்).

(5) இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய சேவைகளில் ஒரு குடிமக்கள் ஊழியராகச் சேவையாற்றியமை பற்றிய சான்றிதழ் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளில் சேவையாற்றியமை பற்றிய சான்றிதழ்.

(6) அடையாளச் சீட்டு (வாய்மொழிப் பரீட்சை நடந்தால், அப்போதும்).

(ஈ) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லா வற்றையும் கைவசம் வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். வாய்மொழிப் பரீட்சை நடந் தால், அப்போது தேவையான சாதனங்களைக் காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது கமத்தொழிற் பணிப்பாளர் கேட்கும்போது அவற்றை அனுப்பிவைக்கத் தாமதிக்கும் எப்பரீட்சார்த்தி களினதும் பரீட்சைக்கான பதிவு நிராகரிக்கப்படும்.

11. பணம் மீளளிப்பு.—எச்சந்தர்ப்பத்திலாவது பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. இப் பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்கள் வேறெப் பரீட்சைக்கேனும் மாற்ற முடியாது.

12. பரீட்சைத் திட்டம்.—இப்பரீட்சைக்குரிய பாடங்களும் ஒவ்வொரு பாடத்துக்குமெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப் படுகின்றன. எல்லா விடைத்தாள்களிலும் கூடாத கையெழுத்துக்கும், எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத வகையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவரென நீக்கிவிடப்படு வதற்கு ஆளாவார்.

| | | | புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | பாஷையும் வியாசமும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) .. .. | 1 மணி .. | 50 |
| (2) | இரசாயனவியல் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) .. .. | 2 மணி .. | 100 |
| (3) | பௌதிகவியல் அல்லது உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) .. .. | 1 மணி .. | 50 |
| (4) | பொது விவேகம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) .. .. | ½ மணி .. | 50 |

கல்விப் பொதுத் தராதர (சாதாரண)ப் பரீட்சைப் பாடத்திட்டத்துக்கு ஒப்பானதாகவே இப்பரீட்சைக்குரிய கேள்விகள் அமையும்.

13. நேரசூசி.—இப்பரீட்சைக்குரிய நேரசூசி பின்வருமாறு ஆகும். இச்சூசியின் பிறம்பான பிரதி வழங்கப்படமாட்டாதாகையினால் இதனை விண்ணப்பகாரர் குறித்து வைத்துக் கொள்ளுதல் நலம்.

பரீட்சைத் தேதி : 1975.05.31.

மு. ப. 9.00—மு. ப. 10.00 பாஷையும் வியாசமும்.

மு. ப. 10.15—மு. ப. 11.15 பௌதிகவியல் அல்லது உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம்.

மு. ப. 11.30—நண்பகல் 12.00 பொது விவேகம்.

பி. ப. 1.00—பி. ப. 3.00 இரசாயனவியல்.

14. பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்.—இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதி யில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்போதோ, பரீட்சைக்குப் பின்னரோ எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும். ஒருவர் நியமனம் பெற்று சேவை செய்யும் காலத்தில் எப்போதாவது இப்பரீட்சை எடுப்பதற்குத் தகுதி அற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

ஈ. அபயரத்ன,
கமத்தொழிற் பணிப்பாளர்.

கமத்தொழில் திணைக்களம், பேராதனை,
1975 ம் ஆண்டு மார்ச் மீ 19 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

ஆய்வுகூட உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை, கமத்தொழில் திணைக்களம்

சுட்டிலக்கம் : ...........

1. இறுதிப் பெயர், முதலெழுத்துக்களுடன் :————.
2. முதலெழுத்துக்களினால் குறிக்கப்பட்ட பெயர்கள் :————.
3. முழு அஞ்சல் முகவரி :————.
   (அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் அலுவலக முகவரியைக் கொடுத்தல் வேண்டும்)
4. தகவுத்திறன் :————
   (அ) பிறந்த திகதி :————.
   (ஆ) கல்வித் தகைமை :————.
   (இ) இலங்கைப் பிரசையாவென்பதும் அவ்வாறாயின் பரம்பரை யினாலா பதிவினாலா என்பதும் :————.
   (ஈ) உமக்குப் பொருத்தமான தகவுத்திறன் சார்ந்த பிற விபரங்கள் :————.
5. நீர் எடுக்கவுள்ள பாடங்கள் :————.

| | பாடம் | மொழி |
|---|---|---|
| (1) | பாஷையும் வியாசமும் | ............ |
| (2) | இரசாயனவியல் | ............ |
| (3) | பொது விவேகம் | ............ |

6. (அ) எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் நான் தந்துள்ள கூற்றுக்கள் யாவும் உண்மையானவையென்வும் நான் ஒட்டும் முத்திரைகள் நிராமானவையென்வும் அவை முன்னர் உபயோகிக்கப்படவில்லையெனவும் எனது நேர்மை யின் பேரில் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

   (ஆ) இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களுக்கிணங்கியொழுக நான் உடன் படுகின்றேன்.

7. முத்திரைகளுக்கான கூண்டு (முக்கியம்)—இவ்வறிவித்தலின் பந்தி 7 ல் உள்ளவாறு பரீட்சார்த்தி இங்கு 4ரு/2 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி அவை மீது தமது கையொப்பத்தையும் தேதியையும் இட்டு அவைகளை அழித்தல் வேண்டும். முத்திரைகளை ஒன்றின்மீதொன்றாக ஒட்டலாகாது.

..........................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

தேதி :————.

8. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :—

........................................ வசிப்பவரும்/வேலை செய்பவரும் என்னால் நன்கு அறியப்பட்டவருமாகிய ............ ........................ என்பவர் 1975 ஆம் ஆண்டு .......... மாதம் ............ ஆம் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தையிட்டாரென நான் இத்தால் உறுதிப்படுத்துகின் றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம் :————.

பெயர், பதவிப் பெயர், நிலை :————.

முகவரி :————.

தற்பொழுது அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரரொருவரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவ்வாறு செய்தற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத் தரினால் செய்யப்படுதல் வேண்டும்.

## பரீட்சைத் திணைக்களம், இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகள் மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(1) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(2) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(3) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(4) சீவிய காலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(5) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(6) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப் படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப் படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாதிகாரிகளைத் தெரிந்தெடுக் கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அறிவுரை சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தை யும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்து கொள்ளவேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழு தும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவ ராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்துள் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்றமுறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக்-கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான் செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும், புத்தகம், சட்டைப் பையில் வைக்கக் கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவு செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறக்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்படவேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு—

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளை கவனித்தல் வேண்டும் :—

(1) ஒரு பாடம் தொடங்குவதற்கு குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்த பட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(2) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(3) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(4) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப் பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிடவேண்டும்.

(5) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டங்கள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி ரப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டுகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(6) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளின் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்படவேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுதவேண்டாம்.

(7) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(8) எல்லா விபர்மான் கணககீடுகளையும பெருமபடியான வேலை களையும் நீர் செய்யும் கணககுக்குரிய செயகை வழிகளின் முறையான அமைபபு முறையில் தருக. வரைபடங்கள் கோட்டு ரூபங்கள், சிறுபடங்கள் என்பன தி..டமாகவும் பெரிதாகவும் இருக்கவேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக காட்டி எழுதப்படும் விடை விடைத் தாளின் மறுபக்கததிலும் தொடரப்படுமானல் அவ்வடிவஙகள மறுபடியும் கீறபபடவேண்டும்.

(9) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்க மாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பககத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப் பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(10) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றி உள்ள விதிகளைச் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதபபடின உமது சித்தியின் தரம் பாதிககப்படும்.

(11) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிபபாளரிடமோ கொடுத்தல் வேணடும் அல்லது, இவர் களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும வரை உமது ஆசனத்தில இருக்கவேண்டும் இது செயயாத் தவறினல் உமது விடைத்தாள் காணமறபோய நீர் இபபாடத்துக்கு வரவில்லையென எண்ணப் படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக கொடுத்தல் கூடாது

(12) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிபபாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாளகள் முதலியன பெறவேண்டினல உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்

பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2.

4-80—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

## அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுள்ள புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. காரியாலய நேரம் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.45 மணிவரை நடைபெறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணிஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக வரைப் அடித்தல் பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரால் " கையொப்பமிடப்படல் அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | .. | .. | 20 | 0 |
| ஒரு பந்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | .. | .. | 220 | 0 |
| இரு பந்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. | | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாறப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்குச் சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்து சேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் | | வெளியூர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. ச. | | ரூ. ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. | .. | .. | .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப் பிரிவு | .. | .. | .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | .. | .. | .. | 43 50 | .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறைவாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கால எல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|---|
| | | ரூ. ச. | | ரூ. ச. |
| (அ) (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 0 20 |
| (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. | 0 20 |
| (ஆ) (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. | 0 15 |
| (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 0 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழே குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணை யில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு' என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு .. .. | வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் .. | புதன் | 26.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் .. | புதன் | 5.3.75 |
| | வெள்ளி | 21 3.75 .. | 12 மதியம் .. | புதன் | 12.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் .. | புதன் | 19.3.75 |
| ஏப்பிறல் .. .. | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் .. | செவ்வாய் | 25.3 75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் .. | புதன் | 2.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் .. | புதன் | 9.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் .. | புதன் | 16.4.75 |
| மே | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 23.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 30.4.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 7.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 14.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 21.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 28.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 4.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 11.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 18.6.75 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.